148

வ்யய௵ ஐப்பசி௴

ஸம்புடம் - 5
ஸஞ்சிகை - 10

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

16 JAN 1947

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: ப்ரசுரிக்குமிடம் :

நெ. 5, ராமஸ்வாமி தெரு, த்யாகராயநகர்,

சென்னை.

வர்ஷச் சந்தா: ரூபா 3—0—0

October 1946
Vol. 5 No. 10

ஸ்ரீ:

விஷய ஸூசிகை.

1.	ஸதாசார்ய கடாக்ஷம்	...	...	212
2.	பஞ்சாங்க ஸங்க்ரஹம்	...	...	216
3.	ஸ்ரீராமாநுஜர் திவ்ய சரித்ரம்	...	...	217
4.	திவ்ய ஹவிஸ்	...	—	223
5.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	—	—	230
6.	செய்திகள்	—	—	235

ஸ்ரீ:

சந்தாதாரர்களுக்கு ஒரு விண்ணப்பம்.

நமது ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியைக்குச் செலுத்தவேண்டிய சந்தாத் தொகையை இன்னும் செலுத்தாமலிருக்குமவர்கள், க்ருபை பண்ணி சீக்ரத்திலேயே அந்தத் தொகையைச் செலுத்தி விடும்படி ப்ரார்த்திக்கப்படுகிறார்கள். இது விஷயமாகத் தேவரீர்களிடமிருந்து இந்த மாஸத்திற்குள் யாதொரு பதிலும் கிடைக்கப் பெறாவிடில், அடுத்த மாஸத்து ஸஞ்சிகையைத் தேவரீர்க்கு V. P. மூலம் அனுப்புவதாக உத்தேசம்.

ஸம்பாதகர்.

ஸ்ரீ

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 5	வ்யய ஹு ஐப்பசி மீ	ஸஞ்சிகை 10

"ஸுஶோபிதே ஶாரதமண்டலேऽஸ்மிந்
க்ருபாபராத்ஸ்வ த்வத்ஸந்நிதியா ந: ।
லக்ஷ்ம்யா ஸமாஶ்லிஷ்ட தவாங்கபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ॥"

—:-0-:—

STRAR OF
17 JAN 1947
RAS

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ருஸிம்ஹகருணோதிதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

——0——

ஸ்ரீ

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸதாசார்ய கடாக்ஷம்

[ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி அம்மாள், பஸவங்குடி, பெங்களூர்.]

[ஸம்புடம் 5, ஸஞ்சிகை 8, பக்கம் 176-ன் தொடர்ச்சி]

“ஏகயைவ குரோர்த்ருஷ்ட்யா ஸாத்யம் யத்வாபி ஸாதிதம் யத: ।
ந தத்த்ரிநேத்ர ஸ்ரஷ்டாஷ்ட ஸஹஸ்ரேணாபி சக்ஷுஷா ॥”

ஆசார்ய கடாக்ஷத்தினல் பகவத் கடாக்ஷத்திற்குப் பாத்ரமாகிறன் ஒரு ஜீவன். அவன் அவ்விரண்டு கடாக்ஷங்களாலும் எல்லாப் புருஷார்த்தங்களையும் அடைகிறன். அவைகளை மூன்று கண்களுடைய சிவனும், எட்டுக்கண்கள் அமைந்த பிரமனும், ஆயிரம் கண்களுடைய இந்திரனும் பெறமுடியாது. ஆகவே உனக்கு ஸதாசார்ய கடாக்ஷம் கிடைத்திருக்கும்போது என்ன குறை? அது ஸத்வகுணம் மேலோங்கி நிற்குமாறு செய்யும்; நன்மையிலேயே மூட்டும்; நன்மையையே விளைவிக்கும்; ஆதலின் இம்மைக்கும் மறுமைக்கும் ஸதாசார்ய கடாக்ஷம் அத்யாவச்யம். இதற்கொரு த்ருஷ்டாந்தம் த்ரௌபதி.

த்ரௌபதி க்ருஷ்ணபக்தியில் முதன்மை பெற்றவளல்லவா? அது அவளுக்கு எவ்விதம் கிட்டியது? அவளது பரமாபத்துக்கள் எவ்விதம் நீங்கின? அனைத்தும் ஆசார்ய திவ்ய கடாக்ஷத்தினல்.

ஒரு ஸமயம் வஸிஷ்டபகவான் இந்த்ரப்ரஸ்தத்திற்கு எழுந்தருளியிருந்தார். அப்பொழுது க்ருஷ்ணன், முனிவரைப் பரம பக்தியுடன் உபசரித்தான். பாண்டவர்கள் ஒவ்வொருவரும் திக்கஜங்கள். அவர்கள் திக் விஜயம்செய்து, ஒருவராலும் செய்தற்கரிய ராஜஸூய யாகம் செய்தனர். பாஞ்சாலியோ ஸாம்ராஜ்ய பதவியை அலங்கரித்திருந்தாள். இவ்வித மிருந்தும் அஹந்தை ஆடம்பரம் ஸ்வய நலம் முதலிய தீய குணங்கள் லேசமும் அவளிடம் தலைகாட்டவில்லை; அறிவு பழுத்து, பக்தி பணிவு விவேகம் முதலிய நற்குணங்கள் தலையோங்கி நின்றன. இதைக் கண்ட முனிவர் பரமானந்த மடைந்தார். அவருள்ளமும் உடலும் பூரித்தன. அத்தருணம் அவர் பாஞ்சாலியைப் பார்த்து “அம்மா! உன் குணமும் பணிவும் மெச்சத்தக்கவை. கணக்கற்ற தாஸ தாஸிகளிருந்தும் ஸகல பணிவிடைகளையும் நீயே செய்தாய். அழகே உருவெடுத்தவள். ஐச்வர்யப் பெருக்கில் ஆழ்ந்திருக்கிறய். ஒவ்வொன்றும் மனிதனை ஆழ்கடலில் ஆழ்த்தி, கருங்கல்லை மேல் சுமத்தும் வல்லமை வாய்ந்தது. ஆயினும் அவைகள் உன்னிடம் தோல்வியடைந் திருப்பதைப் பார்க்க ஆச்சர்யத்திலும் ஆச்சர்யம். என் ஆநந்தத்தின் அறிகுறியாக ஏதாகிலும் ஒரு வரம் அளிக்க என் மனம் விரும்புகிறது. உனக்கு இஷ்டமாகிய வரத்தை வேண்டுவாய்” என்று மொழிந்தார்.

முனிவரின் க்ருபையைக் கண்டு த்ரௌபதி அடங்காக் களிப்பும் வியப்பும் கொண்டாள். அவள் மஹா மேதாவி. மஹானை அடிபணிந்து, "ஸ்வாமி! என் பாக்யமே பாக்யம். மஹர்ஷிகளின் க்ருபை அபாரம். பஞ்ச பாண்டவர்களின் தர்ம பத்நிக்கு ஐச்வர்யம் முதலியவைகளில் ஒரு குறைவுமில்லை. ஆனால் என் பர்த்தாக்களும் அறியாத தர்ம ஸூக்ஷ்மத்தை அறிய விரும்புகிறேன். பரமாபத்து நேர்ந்த காலத்தில் பெண்கள் செய்யவேண்டிய தர்மம் எதுவோ, அதை க்ருபைகூர்ந்து உபதேசிக்கவேண்டும்" என்று வேண்டினாள்.

முனிவர் முகத்தில் புன்னகை நிலவியது. அவர் கண்கள் ஆச்சர்யத்தினால் மலர்ந்தன. அவர் அன்புடன் அவளை நோக்கி, "அம்மா! பாஞ்சாலி! நீயே தந்யை; ஸாரத்திலும் ஸாரமாகிய வரத்தை வேண்டினாய். பரமாபத்து நேர்ந்த காலத்தில் அச்சுதன் திருவடித்தாமரைகளில் சரணாகதி செய்யக்கடவாய். அவனுக்கு மநோ வாக் காயங்களால் ஒரு அஞ்ஜலியை ஸமர்ப்பித்தாயானால், அது உன் ஸர்வாநிஷ்டங்களையும் போக்கும். ஸமஸ்த மங்களங்களையும் உண்டுபண்ணும். அஞ்ஜலி யென்னும் அஸ்த்ரம் எப்பொழுதும வீணாகாது. நாராயணாஸ்த்ரமும் அத்திவ்யாஸ்த்ரத்தின் முன் நிற்காது. இது பரம ரஹஸ்யம். உனக்கு ஸதாசார்ய கடாக்ஷத்தினால் கிடைத்த பெரும்புதையல் இது. இதை ச்ரத்தா பக்தியுடன் பாதுகாக்கக்கடவாய்" என்றருளிச் செய்தார்.

அவளுக்கு மஹத்தான ஆபத் ஸம்பவித்ததென்பது லோகப்ரஸித்தம். ஏகவஸ்த்ரம் தரித்து வீட்டுக்கு விலக்காயிருக்கும் தருணம், துச்சாஸநன் அவளை ஸபைக்கு இழுத்து வந்தான். தன்னால் இயன்றவரையில் புலம்பினாள்; கதறினாள்; ஒன்றும் பயனில்லை. அவள் அரற்றல் அரண்ய ரோதநத்தை ஒத்தது. பீஷ்மர் த்ரோணர் முதலிய பெரியோர்கள் நிறைந்த மஹா ஸபை. அவர்களைப் பார்த்து ந்யாயம் கேட்டாள். அப்பொழுது பீஷ்மர்,

"𑌨 𑌧𑌰𑍍𑌮𑌸𑍌𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑍁𑌭𑌗𑍇 𑌵𑌿𑌵𑍇𑌕𑍍𑌤𑍁𑌂 𑌶𑌕𑍍𑌨𑍋𑌮𑌿 𑌤𑍇 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌮𑌿𑌮𑌂 𑌯𑌥𑌾𑌵𑌤𑍍 ।
𑌅𑌸𑍍𑌵𑌾𑌮𑍍𑌯𑌶𑌕𑍍𑌤𑌃 𑌪𑌣𑌿𑌤𑍁𑌂 𑌪𑌰𑌸𑍍𑌵𑌂 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌶𑍍𑌚 𑌭𑌰𑍍𑌤𑍁𑌰𑍍𑌵𑌶𑌤𑌾𑌂 𑌸𑌮𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 ॥"

["அம்மா! பாக்யசாலியே! தர்ம ஸூக்ஷ்மத்தை அறிந்து ந்யாய ப்ரகாரம் சொல்வது கஷ்டஸாத்யம். ஆகையினால் உன்னுடைய கேள்விக்குத் தகுந்த உத்தரம் கூற அசக்தனா யிருக்கிறேன். ஸ்வதந்த்ரத்தை இழந்தவன் அயலானுடைய ஸொத்தைப் பந்தயம் வைக்கக்கூடாதென்பதை அறிவேன். ஆனால் ஸ்த்ரீயானவள் கணவனுக்கு அடங்கியவள் என்பதைப் பரிசிலனை செய்து பார்க்கும்போது என்ன சொல்வது?"] என்று கூறினார். பொறுப்பதற்கரிய அவமாநம்; மிகவும் பரிதாபம்; என்ன செய்வாள்! பர்த்தாக்கள் தேசிழந்து சித்ரத்தில் எழுதிய கதிரவனைப்போல் இருந்தனர். அத்தருணம் அவளுக்கு முன் வஸிஷ்ட பகவான் அருளிய வரம் மனக்கண் முன் பளிச்சென ப்ரகாசித்தது.

"𑌜𑍍𑌞𑌾𑌤𑌂 𑌮𑌯𑌾 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑍇𑌨 𑌪𑍁𑌰𑌾 𑌗𑍀𑌤𑌂 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 ।
𑌮𑌹𑌤𑍍𑌯𑌾𑌪𑌦𑌿 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇 𑌸𑍍𑌮𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑍋 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍𑌹𑌰𑌿𑌃 ॥"

["அடாடா! என்ன மறதி! எத்தகைய அறிவீனம்! வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அழுவாரைப்போலே, ஆபத்காலத்தில் உதவும் பரம தநம் கையிலிருக்கும் இவ்விதம் புலம்புகிறேனே! முன்னம் ஒரு காலத்தில் பகவான் வஸிஷ்டர் எவ்வளவு அழகாக உபதேசித்தார். பரமாபத்து நேருந் தருணம் எம்பெருமானை, என்னப்பனை, ஹரியை, மனமுருகித் துதிக்கவேண்டும். ஆபத் பந்துவான அவனையின்றி மற்றுமோர் தெய்வமில்லை. அவன் திருவடித் தாமரைகளில் சரணாகதி செய்வதே பரம ஹிதம். அவன் திவ்ய திருநாமங்களைப் பாடிப் புகழ்வதே பரம மங்களம்"] என்று படித்துப் படித்துக் கிளிப்பிள்ளைக்குச் சொல்வதுபோல் கூறியதைச் சற்று மறந்து மோஹமடைந்தேன். இப்பொழுது தெளிந்தேன். அச்சிறந்த உபாயம் நானறிவேன். அதைத் தாமதமின்றிச் செய்கிறேன்; கண்ணனை மணிவண்ணனைக் கூவியழைக்கிறேன் என்று,

"इति निश्चित्य मनसा शरणागतवत्यसौ ।
कृष्णमाने वसने धृतवती च रक्षणार्थिका (?) ॥
शङ्खचक्रगदापाणे द्वारकानिलयाच्युत ।
गोविन्द पुण्डरीकाक्ष रक्ष मां शरणागताम् ॥
हा कृष्ण द्वारकावासिन् क्वासि यादवनन्दन ।
इमामवस्थां संप्राप्तामनाथां किमुपेक्षसे ॥"

கண்ணா! சரணாகத வத்ஸலா! சங்கம் சக்ரம் கதை முதலிய ஆயுதங்களை கட்டிச் சுமப்பது வீணோ? பரமாபத்திலிருந்த கஜேந்த்ராழ்வானைப் பரமபதத்திலிருந்து ஓடிவந்து காத்தாயே. இப்பொழுது இவ்வளவு ஸமீபத்தில் த்வாரகையில் எழுந்தருளியிருந்தும் அநாதையின்மேல் என் இவ்வளவு ஔதாஸீந்யம்? ஆச்ரிதர்களை நழுவவிடாதவன் என்னும் பிருது எவர்க்கு? ஓ தாமரைக் கண்ணா! கோவிந்தா! உன்னை அடுத்த பசுக்களையும் காப்பாற்றினையே. உன்னையன்றி மற்றோர் கதியில்லை. உன்னடிக்கீழ் அடைக்கலம் புகுந்தேன். இப்பேராபத்தினின்றும் காப்பாற்று. கண்ணா! நீ த்வாரகையில் இல்லையோ? எத்தகைய பரிபவம்! நீ ஸர்வஜ்ஞனல்லையோ? என் அவஸ்தையை அறியாயோ? ஒருவர்க்கு ஐவராய் எனக்கு நாதர்களிருந்தும் அநாதையாய்த் தவிக்கிறேனே! அநாதரக்ஷகன் வேறு யார்? உன்னடியாளை ஏன் இவ்விதம் உபேக்ஷை செய்கிறாய்? உன் கரையற்ற கருணைக்கு இது தகுதியோ?

"गोविन्द द्वारकावासिन् कृष्ण गोपीजनप्रिय ।
कौरवैः परिभूतां मां किं न जानासि केशव ॥"

கோவிந்தா! த்வாரகையை விட்டு நீ எங்குச் சென்றாய்? ஆய்ச்சிகளின் அன்பனையிற்றே. அவர்களை ஆநந்த வெள்ளத்தில் ஆழ்த்தும்பொருட்டு ஆய்ப்பாடி சென்றாயே. க்ரூரமே உருவெடுத்த கௌரவர்கள் என்னைப் படுத்தும் பாட்டையறியாயோ? ஓ கேசவா! அடியாளின் மாநஸம்ரக்ஷணம் செய்வது உன் பொறுப்பன்றோ?

"𑌹𑍇 𑌨𑌾𑌥 𑌹𑍇 𑌰𑌮𑌾𑌨𑌾𑌥 𑌵𑍍𑌰𑌜𑌨𑌾𑌥𑌾𑌰𑍍𑌤𑌿𑌨𑌾𑌶𑌨 ।
𑌕𑍌𑌰𑌵𑌾𑌰𑍍𑌣𑌵𑌮𑌗𑍍𑌨𑌾𑌂 𑌮𑌾𑌮𑍁𑌦𑍍𑌧𑌰𑌸𑍍𑌵 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨 ॥"

ஓ நாத! உன்னை அரைக்ஷணமும் விட்டுப் பிரியாத அன்னை ருக்மிணி பிராட்டியை ஸேவிக்க மறந்தனளோ? அல்லது எனக்கு ஞானம் பக்தி முதலிய ஒருவித யோக்யதையும் இல்லை என்பதாக அலக்ஷ்யமோ? ஆகில் கோப கோபியர்களுக்கு எவ்வித அர்ஹதை இருந்தது? அவர்களுக்கு நேர்ந்த பரமாபத்துக்களையும் நாசம் செய்தவன் நீயல்லவோ? கௌரவர்களாகிற கருங்கடலில் முழுகிக் கிடக்கிறேன். ஓ ஜநார்த்தந! ஸகல ஜனங்களின் ஆர்த்திகளையைப் போக்கும் ப்ரபுவே! கரையேற வழியின்றித் தவிக்கும் என்னைக் கரையேற்றி அருள் புரிவாய்.

"𑌕𑍃𑌷𑍍𑌣 𑌕𑍃𑌷𑍍𑌣 𑌮𑌹𑌾𑌯𑍋𑌗𑌿𑌨𑍍 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑍍 𑌵𑌿𑌶𑍍𑌵𑌭𑌾𑌵𑌨 ।
𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌾𑌂 𑌪𑌾𑌹𑌿 𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦 𑌕𑍁𑌰𑍁𑌮𑌧𑍍𑌯𑍇𑌽𑌵𑌸𑍀𑌦𑌤𑍀𑌮𑍍 ॥"

க்ருஷ்ணா! இந்த்ர நீலமணிவண்ணா! கருணைக்கடலே! உன் கருணையின் வேகம் என்னளவில் ஏன் தடையுற்றது? உன் யோகமஹிமையால் பல கண்ணனாய்த் தோன்றி ராஸக்ரீடை பொருந்தினையே. இங்கு இப்பொழுது இந்தத் துஷ்டர்கள் முன் தோன்றி இவர்களை அடக்குவது உனக்கு ஒரு பொருட்டோ? கௌரவர் என்னும் மஹா ஜ்வாலையின் மத்யத்தில் வாடி வருந்துகிறேன். சரணாகதையாகிய என்னுடைய மானஸம்ரக்ஷணம் செய்தருள்வாய். இப்பேதை உன்னடைக்கலம். க்ருஷ்ணா!

"𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯 𑌕𑍃𑌷𑍍𑌣𑌂 𑌸𑌾 𑌹𑌰𑌿𑌂 𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌕𑍍𑌰𑍋𑌶𑌦𑍍𑌦𑍁𑌃𑌖𑌿𑌤𑌾 𑌰𑌾𑌜𑌨𑍍𑌮𑍁𑌖𑌮𑌾𑌚𑍍𑌛𑌾𑌦𑍍𑌯 𑌭𑌾𑌮𑌿𑌨𑍀 ॥"

அவ்வுத்தமி இவ்வாறு லோக நாதனாகிய கண்ணனை ஆர்த்தியுடன் கூவி அழைத்தாள். துயரம் தாங்காமல் இரு கையாலும் முகத்தை மூடிக்கொண்டு 'ஓ' என்று கதறியழுதாள். உள்ளம் உரை செயல் மூன்றினாலும் பகவானைத் தொழுதாள். "நீர்நுமதென்றிவை வேர்முதல் மாய்த்து இறைசேர்மின் உயிர்க்கு அதன்நேர் நிறையில்லே" என்னும் ஆழ்வார் உபதேசமொழியைக் கடைபிடித்து 'நான் என்னுடையது' என்னும் அஹங்கார மமகாரங்களை வேரு மாய்த்தாள். கண்ணன் கழலிணையில் அடைக்கலம் புகுந்தாள்.

"𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾𑌦𑍍𑌦𑍍𑌰𑍌𑌪𑌦𑍍𑌯𑌾𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑍍𑌬𑌰𑍇 𑌤𑌦𑌾 ।
𑌤𑌤𑍋𑌽𑌮𑍍𑌬𑌰𑌂 𑌬𑌹𑍁 𑌪𑍍𑌰𑌾𑌦𑍁𑌰𑌾𑌸𑍀𑌦𑌨𑍇𑌕𑌶𑌃 ।
𑌨𑌾𑌨𑌾𑌰𑌾𑌗𑌵𑌿𑌰𑌾𑌗𑌾𑌣𑌿 𑌵𑌸𑌨𑌾𑌨𑍍𑌯𑌥 𑌵𑍈 𑌪𑍍𑌰𑌭𑍋
𑌪𑍍𑌰𑌾𑌦𑍁𑌰𑍍𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌶𑌤𑌶𑍋 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌪𑌰𑌿𑌪𑌾𑌲𑌨𑌾𑌤𑍍 ॥"

என்ன ஆச்சர்யம்! ஸர்வேச்வரன் அநுக்ரகம் கிடைத்தால் எதுதான் கிட்டாது? அத்துஷ்டன் த்ரௌபதியின் புடவையை இழுக்க இழுக்க மேன் மேலும் எங்கிருந்தோ பற்பல பட்டாடைகள் பூமியில் மலைபோல் வந்து குவிந்தன. சித்ர விசித்ரமாகிய புடவைகள், ஆயிரக்கணக்காய் வந்து குவிந்தன. பரம தர்மத்தைப் பரிபாலித்தாள். பகவத் க்ருபையால் அவ்வுத்தமியின் பேராபத்து விலகியது. த்ருஷ்ட பலத்திற்காக ஶரணாகதி செய்தாள் அவள். சரணாகத

ரக்ஷகன் அவள் மாநஸம்ரக்ஷணம் செய்தான். அம்மஹாநிதி அவளுக்கு ஸதாசார்ய கடாக்ஷத்தால் கிடைத்தது. ஸதாசார்ய கடாக்ஷ மற்றவர்கள் தேவதாந்ரங்களைக் கட்டிக்கொண்டு புலம்புவர். அவர்கள் விலங்கு தறித்து விடுதலை அடைந்த பின்னன்றோ இவர்களுக்கு விடுதலை கிடைக்கும். ஆசார்யகடாக்ஷம் பெற்ற உத்தமி அச்சுத க்ருபைக்குப் பாத்ரமானள்.

ஒரு சேதநனுக்கு ஜாயமான கடாக்ஷம், ஸத்வகுண வ்ருத்தி, ஸதாசார்ய அநுக்ரஹம் ஸத்துக்களின், ஸங்கம் இவ்வித அழகிய படிக்கட்டுகள் பகவத் க்ருபை உண்டாவதற்கு ஏற்படுகின்றன. இவ்விதம் தேனிலும் இனிய அமுதமொழியை மொழிந்தார்.

என்ன பாக்யம்! என்ன பாக்யம்! இவ்வரும் பொருள்கள் ஸாதாரணமாய்க் கிட்டக்கூடியவையா? விலைபெற்ற ரத்நங்க ளன்றோ? இவற்றைப் போன்ற கணக்கற்றவை பல.

ஆனல் அலைமோதும் கடலில் தத்தளிக்கும் மனத்திற்கு அம்மஹான் உபதேசத்தை க்ரஹிக்கும் சக்தி தான் ஏது? ஏதோ ஸதாசார்ய கடாக்ஷத்தினல் ஒரு திவலை யளவு தங்கியதே பெரும்பாக்யம்.

ஒரு ஸமயம் அக்ருபாப்ரவாஹம் பாய்ந்தது. இனி அம்மஹானின் தேனும் பாலும் கன்னலும் அமுதையொக்கும் அவ்வுபதேசம் எங்கே கிட்டும்? ஸௌந்தர்யம் ததும்பும் ஸௌம்யமூர்த்தியின் ஸேவைதான் எங்கே தோன்றும்? அநுபவித்ததை எண்ணி எண்ணி ஆனந்திப்பதும், உபதேசத்தை அணுவளவாகிலும் ஆசரிப்பதுமே அம்மஹானுக்கு நான் புரியும் கைம்மாறு. அஃதன்றி வேறில்லை.

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

வ்யய ஹூ ஐப்பசி மீ

1உ வியாழக்கிழமை	...	துலா க்ருஷ்ணஷ்டமி திதி: துலாரவி 18-53
4உ ஞாயிற்றுக்கிழமை	...	ஏகாதசி திதி
5உ திங்கட்கிழமை	...	ஸ்ரீ வைஷ்ணவ ஏகாதசி
6உ செவ்வாய்க்கிழமை	...	ராத்ரி நகர சதுர்த்தசி ஸ்நாநம்
7உ புதன்கிழமை	...	தீபாவலிப் பண்டிகை
8உ வியாழக்கிழமை	...	ஸர்வ அமாவாஸ்யை
13உ செவ்வாய்க்கிழமை	...	துலா சுக்ல பஞ்சமி திதி
14உ புதன்கிழமை	...	அதிதி; ஸ்ரீ மணவாளமாமுனிகள் திருநக்ஷத்ரம்.
15உ வியாழக்கிழமை	...	துலா சுக்ல ஷஷ்டி திதி
17உ சனிக்கிழமை	...	ஸ்ரீ பொய்கையாழ்வார் திருநக்ஷத்ரம்
18உ ஞாயிற்றுக்கிழமை	...	ஸ்ரீ பூதத்தாழ்வார் திருநக்ஷத்ரம்
19உ திங்கட்கிழமை	...	ஸ்ரீ பேயாழ்வார் திருநக்ஷத்ரம்
20உ செவ்வாய்க்கிழமை	...	ஸர்வ (உத்தாந) ஏகாதசி
23உ வெள்ளிக்கிழமை	...	துலா சுக்ல சதுர்த்தசி திதி
24உ சனிக்கிழமை	...	பூர்ணிமா - ப்ரதமை திதி த்வயம்
30உ வெள்ளிக்கிழமை	...	துலாக்ருஷ்ண ஸப்தமி திதி

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

ஸ்ரீராமாநுஜர் திவ்ய சரித்ரம்.

[தார்மிக ரத்நப்ரதீப ஸ்ரீ. உப. N. R. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், அட்வோகேட், மதுரை.]

—★—

" யோநித்யமச்யுதபதாம்புஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ்ததிதராணி த்ருணாய மேநே
அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைகஸிந்தோ ।
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே. ॥ "

இந்த நாட்டில் நடமாடும் மதங்கள் மூன்று வகையன. அவை:— அத்வைதம், த்வைதம் விசிஷ்டாத்வைத மென்பன. அத்வைதம் 'தெய்வ மொன்றே யுளது; அஃதொழிந்த மற்ற ஸ்ருஷ்டிப் பொருள்களாகக் காணப்படுபவை யெல்லாம் இல்லாதன, வெறும் தோற்றமாவன, உண்மை யல்லாதன' என்று பேசும் கொள்கைத்து. த்வைதமாவது:— இதை மறுத்து, 'தெய்வமும் உண்மை; அஃது ஒழிந்த மற்றெல்லா ஸ்ருஷ்டிப் பொருள்களுங்கூட உண்மைதான்' என்று பேசும் கொள்கைத்து. விசிஷ்டாத்வைதமோ வென்றால்: தெய்வமும் ஸ்ருஷ்டிப் பொருள்களும் ஒன்றையொன்று அடுத்திருந்து, தெய்வம் சரீரியாகவும் ஸ்ருஷ்டிப் பொருள்களெல்லாம் சரீரமாகவும் அமைந்து காணப்படுவன. உலகப்பொருள் ஒவ்வொன்றும் தத்வப்பொரு ளின்றித் தரிக்க கிலதாயும், தத்வப் பொருள் உலகப்பொரு ளின்றி அறியப்படாததாயும் இருப்பன. இவை ஒன்றற்கொன்று ஒழிக்க வொண்ணாத உறவுடையவையாய் நிற்றலையும், காணும் உலகத்தைத் தன் இச்சையால் விரித்தும் ஒளித்தும் பகவான் விளையாடுதலையும் காட்டும் கொள்கைத்து. இந்த மூன்றாவதான ஸித்தாந்தம் மிகப் பழமையானது; வேத சாஸ்த்ரங்களால் தெரிந்து தெளிந்துரைக்கப் பெற்றுள்ளது. அத்வைத த்வைத ஸித்தாந்தங்கள் இதன் உண்மையை மறைத்தும், இதன் தத்வங்களைப் பொய் போல் செய்துகாட்டியும் விளையாடிவந்த காலத்தில், ஒரு பெரிய ஆசார்ய பரம்பரை தோன்றிற்று. அதற்கு நம்மாழ்வார் ப்ரவர்த்தகர். அவர் அருளிய ப்ரபந்தங்கள் நான்கு. அவைகளின் பொருள்கள், திவ்ய ப்ரபந்தத்திலுள்ள மற்றை நூல்களிலு முள்ளன. இந்தத் திவ்ய ப்ரபந்தார்த்தத்தை உள்ளபடி யுணர்ந்து வேதப்பொருளின் விழுமிய நிலை தேர்ந்து அநுபவித்த ஸ்ரீமந்நாதமுனிகள், தாம் கண்டவற்றை உய்யக்கொண்டாருக்கு உபதேசிக்க, அவர் மணக்கால்நம்பிக்கு அருள, அவர் ஆளவந்தாருக்கு உதவ, அவர் சிஷ்யர்களான பெரியநம்பிகள் முதலான ஐவரிடமிருந்து இந்தத் தத்வார்த்தங்கள் அனைத்தும் ஸ்ரீராமாநுஜனுக்குக் கிடைத்தன. இவ்வர்த்தங்களை ஶாஸ்த்ரவாயிலாக ஸ்திரப்படுத்தி, இவற்றின்என்று மழியா உண்மைகளைப் பொய்போல் ஆக்கிக் காட்டின இதர கொள்கைகளை யுடை

யவாது வாதங்களையெல்லாம் உடைத்தெறிந்து, அந்த ஸித்தாந்திகள் கொண்ட துணிபுகளிலும் கண்ட பொருள்களிலும் என்ன என்ன பிழைகள் உள்ளன என்பதைக் குறித்துரைத்து, விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸ்தாபநம் செய்த பெருந்தகை ஸ்ரீ பகவத் ராமாநுஜன்.

ஸ்ரீபெரும்பூதூரில் ஆஸூரியார் வம்சத்தில் கேசவ ஸோமயாஜியார் என்றவருக்கும் காந்திமதி யம்மைக்கும் பிறந்த அருந்தவப் புதல்வர் லக்ஷ்மணர். இவருக்கு உபநயந விவாஹங்களைச் செய்துவைத்தும், வேதாத்யயநம் சாஸ்த்ர பாடம் முதலானவைகளைக் கற்பித்துக் கொடுத்தும், இவர் பிதா காலஞ்சென்றார். இவர் வேதாந்த சாஸ்த்ரம் கற்கும்பொருட்டுத் திருப்புட்குழியில் அப்போது மிக ப்ரபலராயிருந்த யாதவப்ரகாசர் எனும் அத்வைத ஸந்யாஸியிடம் அமர்ந்தார். அவர் விசிஷ்டாத்வைதத்தையும் விஷ்ணு பரத்வத்தையும் பூர்வபக்ஷம் பண்ணிவந்ததனால், ஸ்வாமிக்கும் அவருக்கும் பல ஸம்பாஷணைகளும் மந வித்யாஸங்களும் நேர்ந்தன.

அக்காலத்துக் காஞ்சீபுரத்தில் அரசாண்டுவந்த அரசன் மகளை ஒரு ப்ரம்ஹரக்ஷஸ் பிடித்திருந்ததாகவும், அதை யாதவப்ரகாசர் ஓட்டமாட்டாது, அவர் சிஷ்யராயிருந்த லக்ஷ்மணர் ஓட்டியதன்மூலம் யாதவப்ரகாசர் இவரிடம் அஸூயை கொண்டார் என்றும் சொல்லுவர்.

ஸ்ரீ பேரருளாளன் பக்கல் ஸ்வாமிக்குள்ள ஈடுபாடு.

காசிக்குச் சென்ற யாதவப்ரகாசர் கூட்டத்தினின்றும் லக்ஷ்மணர் விந்த்ய மலையருகில் பிரிந்து, தெற்குநோக்கி ஒரு பகல் முழுதும் நடந்து இரவில் வழிகாணாது தவிக்கும்போது, ஒரு வேடதம்பதிகள் ஸ்வாமியை அழைத்துவந்து விடியற் காலத்தில் தங்களுக்குத் தாஹிக்கிறது என்று சொல்ல, ஸ்வாமி அங்கிருந்த ஒரு கிணற்றில் இறங்கி இருகைகளாலும் நீரள்ளிக் கொடுக்க, அவர்கள் வாங்கிப் பருகி விடாய்தீர்ந்து மறைந்தனர் என்றும், ஸ்வாமி வெளியே வந்து விசாரிக்க, அந்த இடம் ஸ்ரீகாஞ்சி என்றும், அது சாலைக்கிணறு என்றும் தெரிந்தவுடன், தம்மை அங்கே அழைத்துவந்தவர்கள் ஸ்ரீ பேரருளாளனும் பெருந்தேவித் தாயாருமே என்று அறிந்து, அன்று முதல் சாலைக்கிணற்றுத் தீர்த்தத்தைக் கொண்டுபோய்ப் பெருமாள் திருமஞ்ஜநாதி கைங்கர்யங்களுக்குக் கொடுத்துக் கொண்டு வேதாந்த சாஸ்த்ரத்தை இடைவிடாமல் பயின்றுவந்தார். அக்காலத்தில் பேரருளாளனை ஸேவிக்க எழுந்தருளின ஆளவந்தார், ஸ்வாமியையும் கடாக்ஷித்துப் போனார்.

ஸ்வாமி ஸ்ரீரங்கம் எழுந்தருளியது.

ஆளவந்தார் முதிய வயதுடையராய்ச் சரமதசை நெருங்குங்கால், ஸ்வாமியின் ஜ்ஞாநாநுஷ்டாந வைராக்யாதிகளைக் காஞ்சியிலிருந்து வருபவர் சொல்லக் கேட்டுத் 'தம் பிதாமஹர் அடிக்கோலி வழியிட்டதான உபயவேதாந்த விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை ஊர்ஜிதப்படுத்தி உலகுக்குதவ ஸ்வாமியே தகைமையுடையவர்' என்று தீர்மானித்துத் தம்முடைய சிஷ்யர்களில் முக்யஸ்தரான பெரியநம்பிகளைக் காஞ்சிக்கு அனுப்ப, அவர், ஸ்வாமி நீராடித் தீர்த்த

மெடுக்கும் சாலைக்கிணற் றடியிலிருந்து ஸ்தோத்ர ரத்ந ச்லோகங்களைப் பாட, அதில் ஸ்வாமி ஈடுபட்டுப் பெரியநம்பிகளுடன் ஸ்ரீரங்கத்திற்கு வரும்போது ஸ்ரீ ஆளவந்தார் நித்ய விபூதிக்கு எழுந்தருள, அவர் திருக்கை விரல்களின் குறிப்பால் (1) நாராயண பரத்வத்தைப் பரக்கக் கூறிய வ்யாஸ பராஸரர்களிடத்து க்ருதஜ்ஞதையும், (2) மாறன் சடகோபன் திருவடிகளில் என்றும் குறையாத ஈடுபாடும், (3) வ்யாஸ ஸூத்ரத்திற்கு விசிஷ்டாத்வைத தத்வநிர்ணய வ்யாக்யாநமும் ஆளவந்தார் திருவுள்ளம் என்றறிந்து, அம் மூன்றையுமே தம் ஆயுட் காலத்தின் குறிக்கோள்களாகக் கொண்டார். இவைகளையெல்லாம் ஸ்வாமி நிறைவேற்றித் தந்தது ஸுப்ரஸித்தம். இதனுடன் ஸ்வாமி காஞ்சிக்குத் திரும்பிவிட்டதாகவும், அதன்பிறகு ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டிகளுக்குத் தக்க தலைவர் இல்லாமையால் எல்லோருடைய வேண்டுகோளுக்கும் இணங்கிப் பெரியநம்பிகள் ஸ்வாமியை அழைத்துவர, மறுபடி காஞ்சியை நோக்கிப் புறப்பட, ஸ்வாமியும் ஆளவந்தார் சிஷ்யர்களோடு கலந்து பரிமாறக் காஞ்சியை விட்டு ஸ்ரீரங்கத்திற்குப் புறப்பட, இவ்விருவரும் மதுராந்தகத்தில் ஸந்திக்க, ஸ்வாமி, ஸ்ரீ பெரியநம்பிகள் திருவடிகளில் ஈடுபட்டுப் பஞ்சஸம்ஸ்காரம் செய்யப்பெற்று, த்வய மந்ரோபதேசமும் பெற்றார். அதனால் அந்தத் திவ்யதேசத்திற்கு 'த்வயம் விளைந்த திருப்பதி' எனப் பெயராயிற்று. அப்படியே ஸ்வாமி பெரியநம்பிகளோடு ஸ்ரீகாஞ்சிக்கு எழுந்தருளி, இருவரும் ஒரு திருமாளிகையில் குடித்தனமாகச் சில மாதங்கள் இருந்து, அப்பொழுது ஆளவந்தாரிடம் பெரியநம்பிகள் கேட்டுள்ள அநேக அபூர்வார்த்தங்களை ஸ்வாமி கேட்டறிந்துகொண்டார்.

ஸ்வாமியின் ஸந்யாஸம்

அரங்கன் அடியிணைகளின் அநுபவமும், அதில் உள்ள ஈடுபாடும் ருசியும் ஆளவந்தார் அடைந்த அரசுச் செல்வத்தினும் அநேக மடங்கு அதிக ரஸமுள்ளனவாக இருந்ததையும், அதனால் அவ்வரசுச் செல்வத்தை அறவே யொழித்து இவ்வடி சூடும் அரசை ஆசைப்பட்டு அடைந்துய்ந்தார் என்னும் திறத்தையும், அதற்குக் காரணமாகவும் அதன் காரியமாகவும் பெரிய நம்பிகள் நேரில் கண்டறிந்த எல்லா விவரங்களையும் ஸ்வாமி கேட்டுக் கேட்டு அறிந்தறிந்து உணர்ந்துணர்ந்து தாமும் அவர்போல் துறவு பூண்டு, அரங்கனுக்கே ஆட்செய்யவேண்டுமென்னும் துணிவையும், ஆளவந்தாரிடம் இன்னும் பல அரும் பெரும் பொருள்களைக் கேட்டறிந்து உணர்ந்துள்ள மற்றைப் பெரியார்களிடமிருந்து அவைகளையும் தாம் அடையவேணும் என்னும் அவாவையும் உடையரானார் என்பது அநுமானிக்கத்தக்கது. இந்த உறுதியும் நினைவும் கொண்டே ஸ்வாமி துறவு பூண்டா ரென்பதும், ஆளவந்தாருடைய மற்ற சிஷ்யர்களிடம் மஹத்தான உபதேசங்களைப் பெற்று அர்த்தங்களை க்ரஹித்தார் என்பதும் ஸமஞ்ஜஸமாகும்.

ஸ்வாமியின் மற்ற ஆசாரியர்கள்

திருக்கோட்டியூர் நம்பியிடம் திருமந்த்ரம் சரமச்லோகம் இவைகளின் உபதேசத்தையும் ஸாரார்த்தங்களையும், திருமலை நம்பியிடம் ஸ்ரீமத்ராமாயணார்த்தத்தையும் ஸ்வாமி கேட்டுணர்ந்து, ரஹஸ்யத்தின் தத்வத்தை ராமாயணமாகிய

இதிஹாஸத்தின் உதவியைக் கொண்டு, அதுவே ஹிதமாய்ப் பகவத் பாகவத கைங்கர்யமாகிய புருஷார்த்தத்தில் குற்றங் குறையின்றி அந்வயித்து அநுபவிக்கும் திறத்தைத் திருவரங்கப்பெருமா ளரையரிடத்தும், 'பூர்வை, பூர்வதரம் க்ருதம்' என்னும் உபதேசத்துக் கேற்ப ஸ்வாமி உள்ளபடி க்ரஹித்து அறிந்துணர்ந்து அநுஷ்டித்தார். இதுபோல் திருமாலையாண்டானிடம், அவர் ஆளவந்தாரிடம் கேட்ட திவ்ய ப்ரபந்தார்த்தங்களை ஸ்வாமி செவியுற்று, ஒவ்வொரு திவ்ய ஸூக்தியிலும் ஆளவந்தார் திருவுள்ளம் அந்வயிக்கும் திறத்தனவாகிய அர்த்தங்களையெல்லாம் மநஸ்கரித்து மகிழ்ந்தார். இவைகள் ஸம்பந்தமாக ப்ரஸித்தமாய் நிகழும் சரித்ரங்களால், ரஹஸ்யத்ரயத்தில் த்வயம் என்பது தாய்போல் பரிந்து தானே யெடுத்துத் தன் பாலை யூட்டி மகவை வளர்க்கும் மந்த்ர மென்பதும், திருமந்த்ரம் தகப்பனைப்போல் இடர்ப்படுத்தி மகவை நேர்படச் செய்யும் மந்த்ர மென்பதும், சரமச்லோகம் இவ்விரு மந்த்ரங்களின் ஆதிக்யமும் ஆட்சியும் ஜீவனை ஆட்கொண்ட பிறகு அநுஷ்டாநத்தால் திருந்தி நின்ற அபிஜ்ஞனை ஆசார்யன்மேலும் நேர்படுத்தி வழிகாட்டும் மந்த்ர மென்பதும் ஸ்வாபதேசார்த்தத்தால் நன்கு விளங்கும். அவ் வரும் பெறல் மணிகளை அள்ளி இறைத்து, 'உலகத்தார் உஜ்ஜீவந மடையட்டும்; நான் நகர மடைய ஸித்தம்' என்று நின்ற எந்தலின் பெருமை யெண்ணி யெண்ணி இன்புறற் குரியது. ஆனதால் ஸ்வாமியின் நாம ரூபங்களை மட்டில் அநுஸந்தித்துவரும் அடியார்களெல்லோரும் நித்யஸ்ரீயும் நித்ய மங்களமு மெய்தி வாழ்வார்கள்.

ஸ்வாமி ஸ்ரீபாஷ்யம் கண்டது

ப்ரம்ஹ ஸூத்ரத்தை வகுத்த வ்யாஸ பகவானின் முக்ய சிஷ்யரான போதாயநர், அந்த ஸூத்ரங்களுக்கு வ்யாஸ பகவானிடம் தாம் கேட்டுணர்ந்த உண்மைப் பொருள்களைப் பொதிந்து 'போதாயந ஸூத்ரவ்ருத்தி' என்னும் ஓர் அரிய பெரிய உரை இயற்றியிருந்தார் என்பது ஸுப்ரஸித்தம். அத்வைத த்வைத மதங்களையும், மற்றும் பலபடியான கொள்கைகளையும் அந்த உரை ஆதரிக்கா தாதலின், ஸ்வாமி அவதாரத்துக்கு நெடுங்காலம் முன்னமே பல மதஸ்தர்களும் அதை இருந்த இடம் தெரியாமல் ஆக்கிவிட்டார்கள். காச்மீர ராஜ்யத்தின் நூல் நிலையத்தில் அதன் ஒரு ப்ரதி இருப்பதாகக் கேள்வியுற்று, ஸ்வாமியும் கூரத்தாழ்வானுடன் அங்குச் சென்று அதைக் கற்றுவந்து, அதன் வழியிலே ஸ்ரீ பாஷ்யத்யதை ஸ்வாமி ஸாதித்தார் என்பர். ஸ்வாமி காலத்துக்கு முன் இருந்தவர்களாகிய டங்கர் குஹதேவர் த்ரமிட பாஷ்யகாரர் ஸ்ரீவத்ஸாங்க மிச்ரர் முதலானவர்களும், விசிஷ்டாத்வைத பரமாக ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்கு வ்யாக்யாநங்கள் செய்துவைத்திருந்ததையும் ஸ்வாமி ஆதாரமாகக் கொண்டார் என்றும் சொல்வர். பேதாபேத கடக ச்ருதிகளின் ஸமந்வய சாதுர்யஸ்ரீ ஸ்வாமியிடம் மலிந்து காணப்படுவது, திவ்ய ப்ரபந்தங்களிலுள்ள ஆழ்வார்களின் திவ்ய ஸூக்திகளிலும் அவைகளின் அர்த்தங்களிலும் ஸ்வாமி ஆழங்கால்பட்டு நின்றதனால் என்று சொல்வதே உண்மையாகும். இதைத்தான் ஸ்ரீ தேசிகன்: 'இவர்கள் மகிழ்ந்துபாடும் செய்யதமிழ் மாலைகள்நாம் தெளியவோதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே' என்றார். ஸமாதி ஸக்தியால் பகவான்

பக்கல் கண்ட வடமொழி வேதங்களில் நஹிநிந்தா ந்யாயத்தாலும், உத்தேச்ய ப்ராசஸ்த்யத்தாலும், இன்னும் பல அலங்கார விசேஷங்களாலும், பலதிறப்பட்டு உதிக்கும் வாக்யங்களெல்லாம் ஒன்றற்கொன்று முரண்பட்டு அவிழ்க்கமுடியாத முடிச்சுகளாகப் பிற மதஸ்தர்களுக்கும் நம் மதத்தில் ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு முன் இருந்தவர்களுக்கும் அல்லலைத் தந்து இடர்ப்படுத்தி நின்றதையும், மகிழ்ந்துபாடும் செய்ய தமிழ்மாலைகளைத் தெளிய ஓதினவுடன் அம்முடிச்சுகளெல்லாம் தாமாக அவிழ்ந்து 'நாராயணனே பரம்; அவன் ஸங்கல்ப ஸூர்யோதயமே உத்தாரகம்; அதற்கு ஶரணாகதியே உபாயம்; அவனுக்கும் அவனடியார்க்கும் ஆவன செய்து நிற்றலே புருஷார்த்தம்' என்னும் தொடக்கத்தனவாகிய உண்மைப் பொருள்கள் லேசாக அறியப்படலாயின என்கிறார். தெளியாத மறை நிலங்களுக்குக் கெதிரே செய்ய தமிழ் மாலைகள் கைகொடுத்து உதவிய திறம் கண்டு களிக்கத்தக்கது. மேலே சொன்ன இடர்ப்பாட்டால் உண்டான அநேக ப்ரதாந மதங்களையும் உபமதங்களையும் ஸ்வாமி ஸ்ரீ பாஷ்யத்தில் கண்டித்திருக்கிறார். இவைகளின் விவரங்களைச் சுருக்கமாக ஸ்ரீ தேசிகனுடைய பரமதபங்கத்தில் காணலாம். இதுபோல், நம் ஸம்ப்ரதாயத்துக்கு இன்றியமையாதனவான தர்மாநுஷ்டாநங்களை விளக்கி, கத்யத்ரயம் நித்யம் முதலான க்ரந்தங்களைச் செய்து ஸித்தாந்த ரக்ஷையை ஸ்வாமி ஸாதித்தார். இந்த ஸித்தாந்தமும் ஸம்ப்ரதாயமும் நீடூழி வாழவும் ஸர்வதேச தசா காலங்களிலும் இவை பரவி ப்ரகாசிக்கவும் 74 சிஷ்யர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு ஆசார்யாபிஷேகம் செய்து, ஸ்வாமி அவர்களை ஸித்தாந்த ஸிம்ஹாஸநாதிபதிகளாக்கியருளினர். அவர்கள் வழித்தோன்றல்கள் இன்னும் இந்த ஸம்ப்ரதாயத்தைக் காப்பாற்றியும் வளர்த்தும் வருகிறார்கள்.

ஸ்ரீ ஸ்வாமியின் ஸ்ரீரங்க வாஸம்

ஆளவந்தாரே தமக்கு முதலாசார்யராக ஸ்வாமி உள்ளளவும் கொண்டிருந்ததற்கேற்ப, அவர் வஸித்த ஸ்ரீரங்கமே தமக்கும் உறைவிடமாகக் கொண்டார். அங்கே ஸந்நிதித் திருப்பணிகளைப் பலபடியிலும் சீர்திருத்தி எல்லாத் திட்டங்களையும் வகுத்தாரென்பதும், அத்திட்டங்களே இன்றும் நிலவுகின்றன என்பதும் கோயிலொழுகால் அறியக் கிடக்கின்றன. ஸ்ரீமந்நாதமுனிகள் திருவாய்மொழி ஆயிரத்தைமட்டில் பண்பட அபிநயித்து, அரங்கனுக்கு ஸமர்ப்பிக்கும்அத்யயந உத்ஸவம் என்னும் இராப்பத்தை ஏற்படுத்தினர். அதுபோல் மீதமுள்ள மூவாயிரத்தையும் பண்பட அபிநயித்து அரங்கனுக்கு ஸமர்ப்பிக்கும் வண்ணம் ஸ்வாமி பகல்பத்தை ப்ரவர்த்திப்பித்தார். ஸ்வாமியை அடியொற்றியே பட்டரும் திருநெடுந்தாண்டகத்தின் பெருமையை உணர்ந்து அதற்கு முதலுத்ஸவம் கொண்டாடச் செய்தார். ஆனதால், இன்னமும் ஸ்ரீரங்கத்தில் அத்யயந உத்ஸவம் இருபத்தொரு தினங்கள் நடந்துவருகின்றது. திருவேங்கடமுடையான் ஸேவையும், திருக்கோட்டியூர் முதலான திவ்யதேச யாத்ரைகளும், ராஜ நிர்ப்பந்தத்தால் மேல்நாட்டில் எழுந்தருளியிருந்த காலமும் தவிர, ஸ்வாமி ஸ்ரீரங்கத்தையே தம் உறைவிடமாகக் கொண்டார். ஸ்வாமி சில ப்ரம்ஹரக்ஷஸ்

ஸூகளை ஓட்டி அவைகளுக்கு நற்கதி கொடுத்து, விஷ்ணுவர்த்தநன் முதலான அநேகரையும், யாதவப்ரகாசர் முதலான மதாந்தரத்தில் ப்ரதிஷ்டிதராயிருந்த பலரையும், இந்த ஸித்தாந்த நிஷ்டர்களாகச் செய்து ஆட்கொண்டார்.

ஸ்வாமியின் திருநாமங்கள்.

இவருக்குப் பெற்றோரிட்ட பெயர் லக்ஷ்மணன் என்பது. ஆச்ரமஸ்வீகார காலத்தில் இடப்பட்டது ராமாநுஜர் என்னும் தாஸ்யநாமா. ஸ்ரீரங்கநாதன் உகந்தளித்த திருநாமம் உடையவர் என்பது. திருக்கோட்டியூர்நம்பி இவரை எம்பெருமானார் என்றழைத்தார். ஸ்ரீபாஷ்யம் ஆக்கித்தந்த அருமை யுணர்வோர் இவரை ஸ்ரீபாஷ்யகாரர் என்றழைப்பர்.

முடிவு

ஸ்ரீ ஸ்வாமியின் காலம் கி. பி. 1017 முதல் 1137 வரை. ஸ்வாமி 120 திருநக்ஷத்ரம் இந்த விபூதியில் ஸேவை ஸாதித்தருளினார். அவருடைய நீண்ட கால வாழ்வின் சரித்ரம் மிகப் பெரியது. அதில் முக்யாம்சமானது அவரிடம் ஊறி ஓடும் அருள் வெள்ளத்தினால் அவர் உலகத்தாரை நல்வழிப்படுத்தி உய்யக் கொண்டது. ஸ்வாமி பௌதிகமான திருமேனியைக்காட்டிலும் அவர் ஸ்ரீஸூக்திகளாகிய ஆந்தரீய திருமேனி, நித்யமாய் ஸ்வாமியின் பெருமைகளையெல்லாம் உலகுக்கு விளக்குவது. ஆழ்வாரிடத்தில் மதுரகவிக்கு உண்டான ஈடுபாடு ஸ்வாமிக்கும் உண்டு. திருக்குருகைப்பிரான்பிள்ளானால் திருவாய்மொழிக்கு ஆறுயிரப்படி வ்யாக்யாநத்தையும் ஸ்வாமி செய்துவைத்தார். ஸ்ரீ தேசிகனுக்கு அதே ஈடுபாடு ஸ்வாமியிடத்தில் உண்டென்பதும் நன்கு நிரூபண மாகிறது. இதனாலும் ஸ்வாமியின் பெருமையை அறியலாகும். ஸ்ரீஸ்வாமி திருவடிகளை நம்பி விசிஷ்டாத்வைத ஸ்ரீ வைஷ்ணவ உலகம் உய்யக்கடவது.

வான்திகழும் சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல்
ஆன்ற தமிழ்மறைகள் ஆயிரமும்—ஈன்ற
முதல்தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த
இதத்தாய் இராமாநுசன்.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

திவ்ய ஹவிஸ்

[ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்யர், M.A., L.T., வித்வான், திருவையாறு.]

என் பெயர் ஏன் கல்யாணி என்று வைத்தார்களோ? காரணத்தை எம்பெருமான்தான் அறிவான். பரம தரித்ரமான குடும்பத்தில்—நான்கு பிள்ளைகள் ஐந்து பெண்கள் இருந்த குடும்பத்தில் — என் தாய் தந்தையருக்கு வேண்டாப் பேருக நான் பிறந்தேன். பிறந்தது அதிசய மில்லை. தாய் தந்தை ஸஹோதரன் ஸஹோதரி யாவரும் என்னை வெறுத்ததுதான் அதிசயம். என் பிறப்பில் எனக்கென்ன உரிமை இருக்கிறது? எங்குப் பார்த்தாலும் என்னைச் சுற்றிப் பேச்சு. வீட்டிற்குள்—தெருவில்—கோவிலில்—குளத்தில்—ஆற்றங்கரையில் - ஓயாத பேச்சு. 'என்னடி இவ்வளவு அவலக்ஷணம்?' என்றும், 'பெண் ஜன்மத்தில் இவ்வளவு விகார ஸ்வரூபம் இல்லை; இது என்ன துர்த்தேவதையோ?' என்றும், இளம் பிராயமுள்ள என் காதில் விழுங்கால் என் மனம் துடிக்கும். நான் யாவராலும் இகழ்ப்பட்டேன் என்பது மாத்ரம் எனக்குப் புலப்பட்டது. வெறுப்பில் பிறந்து அவமதிப்பில் வளரலானேன்.

ஏழெட்டு பிராயத்தில் என் முகத்தைக் கண்ணுடியில் பார்த்தேன். மற்றக் குழந்தைகள் முகத்தையும் பார்த்தேன். நீண்டு கறுத்த முகம். குறுகிய ஒளியற்ற கண்கள். அதிக தீர்க்கமான தடித்த மூக்கு. முப்பத்திரண்டுக்கு மேல் மூன்று நான்கு அதிகமான பற்கள். என் பேரில் எனக்கு அருவருப்பு இல்லை. அன்று மில்லை இன்று மில்லை. அன்று இல்லாமைக்குக் காரணம் இயற்கை. தன்னை அழகிற் குறைந்ததாகக் கருதுபவர் யார்? இன்று இல்லாமைக்குக் காரணம் லோகாநுபவமும், மாற்றி அமைக்கத் திறமை யில்லாமையுமே.

வீட்டு வேலைகளின் கடுமை என்மேல் விழுந்தது. என்னோடு உடன் பிறந்துள்ள குரூபம் என்கிற குற்றத்தை நான் நினைத்துக்கொண்டேயிருக்க முடியுமா? மற்றக் குழந்தைகளுடன் போட்டியிட்டுச் சில ஸமயம் வேலை செய்ய மறுப்பேன். அதற்காக ஒருநாள் என் தாய் என்னைக் காலால் உதைத்துத் தள்ளி, "உன் மோரையைக் கண்டவுடனே குப்பையிலே எறிந்துவிடலாம் என்று சொன்னுளே எல்லாரும். அப்படி எறிந்திருந்தால் இப்போ எங்கேயிருப்பே நாயே! சீ துடப்பக்கட்டை! உன் முகப் பவிஷுக்கு ஒரு பேச்சா?" என்றுள். என் தந்தை "அதைக் காவேரியிலே கட்டி விட்டிருந்தால் கூடப் பாவ மில்லை. இது ஏன் பிறந்ததோ!" என்று தலையி லடித்துக்கொண்டார். என் குற்றம் எனக்கு மிகையாகவே தோன்றவில்லை. ஆனல் யார் அதட்டினுலும் நடுங்குவேன். யார் என்ன செய்தாலும் நான் உட்படவேண்டியதென்ற உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது.

ஒருதரம் நடு நிசியா யிருக்கலாம். வீட்டிற்கு யாரோ அலைந்து திரிந்த விருந்தினர் ஒருவர் வந்தார். குளிர் காலம். அவருக்கு அன்னம் தயாரிக்கத் தாயார் கொல்லைப்புறம் விறகு எடுத்துவர என்னை எழுப் பினாள். அயர்ந்து தூங்கிவிட்டேன்- நெற்றியில் அவள் ஓங்கி உதைத்தது இப்போது ஞாபகத்திற்கு வருகிறது. எழுந்தேன். குளிர் நடுக்கியது. பேசாமல் விறகு எடுத்துவந்தேன். ச்ரமத்தையும் பயத்தையும் யாரிடம் சொல் வேன்? என் இளமையான உள்ளத்தில் ஒரு நம்பிக்கை வளர்ந்தது. ராமா யணம் பாரதம் இவற்றைக் கேட்கும்பொழு தெல்லாம், 'தெய்வம் நம்முடன் இருந்து நம் ஸுகதுக்கங்களை ஏக ஸாக்ஷியாகக் கவனித்துக்கொண் டிருக்கிறது' என்று அடிக்கடி பெரியோர் சொல்லிக் கேட்டிருக்கிறேன். எங்கே கண்ணனை நினைக்கிறோமோ அங்கே அவன் இருக்கிறா னென்றும், எங்கே அவனைக் கூப் பிடுகிறோமோ அங்கே அவன் வருவா னென்றும், என்ன செய்ய வேண்டு கிறோமோ அதை அவன் செய்து கொடுப்பா னென்றும் கேள்வியுற்றிருந்தேன். தாய் தந்தை ஸஹோதரன் ஸஹோதரி யாவராலும் ஒதுக்கி இழிவுபடுத்தப் பெற்ற என் இளம் உள்ளம், தன்னடையாக இந்த ஸர்வ பந்துவிடம் சென்றது. வேறுவழி? நான் விறகெடுக்கச் சென்றாலும் தண்ணீர் மொண்டுவரச் சென் றாலும், புடவை வேஷ்டிகள் தோய்க்கச் சென்றாலும், 'கண்ணா கண்ணா' என்று கதறிய வண்ணம் செல்வேன். அம்மா அடித்து உடம்பும் மனமும் நொந்தால், 'இன்று என் கண்ணன் கைவிட்டு விட்டான்' என்று புலம்புவேன்.

எவ்வளவு குரூபியானாலும் எவ்வளவு ஏழையானாலும் வயது மாத்ரம் ஆகாமல் இருக்குமா? வயிற்றுக்கு ஆஹாரம் இல்லையென்றால் வயது காத் திருக்குமா? எனக்குப் பதினன்கு பதினைந்து வயதாய்விட்டது. என் தமை யன்மார் பாடசாலையில் வேதாத்யயநம் செய்துகொண்டிருந்தனர். என் ஸஹோதரிகள் ஒருவர்பின் ஒருவராகக் கால அளவில் எப்படியோ கல்யாணம் செய்து கொடுக்கப்பட்டனர். இரண்டாந் தாரம் மூன்றாந் தாரமாக அவர்கள் கொடுக்கப்பட்டதை நான் சொல்லவேண்டியதில்லை. வைதிக வ்ருத்தியிலுள்ள என் தந்தை எவ்வளவு அகட விகட ஸாமர்த்யம் செய்தும் குடும்பத்தைப் போஷிக்கவே திணறினார். இப்படியிருக்க, எப்படி என்னை மணம் செய்து கொடு ப்பார்? என்னைக் கண்டவுடன் என் முகத்தைப் பார்த்துச் சிலர் சிரித்தனர். சிலர் இழிவாகப் பேசினர். மற்றும் சிலர் பயந்தனர். என்னுடைய குரூபத்தை மறந்து என்னை யார் மணப்பர்?

வயது மாத்ரம் ஆய்க்கொண்டேவந்தது. நானும் குழந்தைப் பருவம் கடந்து ருதுமதி யானேன். என் உடம்பில் ஏதும் வனப்போ வசீகரமோ காணப்படவில்லை. முழு வயிறு அன்னத்தைக் கண்டிராத என் உடல் மெலிந்து உலர்ந்து கறுத்துக் காணப்பட்டது. ஏழ்மையிலும் இழிவிலும் பிறந்த எனக்கு மணம் என்பது முடவனின் கொம்புத் தேன். ஆனால் ஊரெங்கிலும் பேச்சு எழுந்தது. "வயது இருபதாகப்போகிறது! என்ன நெஞ்சுத் துணிச்சல்! கல்யாணத்தைப்பற்றியே நினைக்கமாட்டார்கள்போல் இருக்கிறது" என்றார்

189226

சிலர். வேறு சிலர் "கூனோ குருடோ எங்கேயாவது கட்டித் தொலைக்கிறது தானே!" என்றார். மற்றுஞ் சிலர் "இப்படி மானங் கெட்டுப் பெண்களை வளர்ப்பதை விடப் பாழ்ங் கிணற்றிலே தள்ளலாம்" என்றனர். இதையெல்லாம் கேட்டுவந்த என் தந்தை ஒருநாள் என் தாயிடம் "எனக்கு உயிரையே வைத்துக்கொள்ளப் பிடிக்கவில்லை. இப்படி ஒரு சனியன் நமக்கு வந்து பிறக்க வேண்டாம்; நாம் இந்தச் சீரழிவும் படவேண்டாம்" என்றார். அவர் வ்யஸநத்தைக் கண்ட என் தாய், "நமது போராத வேளை அது கல்லு மாதிரி இருக்கு. எத்தனையோ கொடிய வ்யாதி ஆபத்துக்களிலும் அது சாகவில்லையே! நாம் என்ன செய்யலாம்? பகவான்தான் ஒரு வழியா க்ருபை செய்யணும்" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டாள். இதைக் கேட்ட என் மனம் என்ன பாடுபடும்!

என் வாழ்க்கையில் நல்லதோ பொல்லாதோ ஒரு காரியம் மாத்ரம் ஸாதித்தேன். எனக்கடுத்த அண்ணன் ராமாநுஜத்தினிடம் தமிழ் எழுதப் படிக்க மிக வேகமாய்க் கற்றுக்கொண்டேன். ஒருவருக்கும் தெரியாமல் என் அக்கா ஸௌந்தரியிடமிருந்து புஸ்தகங்களை வாங்கி வாங்கிப் படிப்பதில் பேராவல் கொண்டேன். கிடைத்த புஸ்தகங்களை யெல்லாம் வாசித்து வந்ததில், எனக்குப் பாஷையில் சிறந்த திறமை உண்டாயிற்று. கதைப் புத்தகங்கள் ஏராளமாக என் அக்காவிடமிருந்து கிடைத்தன. வாசித்து மகிழ்வேன். எத்தனையோ ஏழைப் பெண்கள் தனிகர்களாலும் அரச குமாரர்களாலும் கல்யாணம் பண்ணி அழைத்துச் செல்லப்பட்டனர் என்பதைப் படித்தேன். 'எனக்கும் அப்படி யொரு நல்ல காலம் ஏன் வரக்கூடாது? அரை நிறைய ஆடையும் வயிறு நிறையச் சோறும் கிடைக்கும்படி கண்ணன் எனக்கு அருள் செய்வான்' என்று முழுமனதுடன் நம்பினேன். ஆனால் என் முகத்தின் நினைவு வந்தது. எந்தக் கதா நாயகிகளாவது என்னைப்போல் இவ்வளவு பயங்கரமான முகத்தை உடையவர்களா யிருந்தார்களா என்று நினைக்கும்போது என் உடல் ஒருதரம் நடுங்கும்.

ராமாநுஜத்தின் தோழன் ஒருவன், நளவெண்பா தனிப்பாடல் திரட்டு முதலிய தமிழ் நூல்களை எங்கள் வீட்டில் வைத்துப் போனான். வேலையில்லாத ஸமயங்களில் மெதுவாக அவற்றை வாசித்து இன்புறுவேன். தமிழின் இனிமை என் ஆவியைக் கொள்ளைகொண்டது. தமிழ் எனக்கு ஆறுதல் அளித்தது. ஸர்வலோக நாதனான சரண்யன் ஒருவன் உண்டென்றும், அவனை நேசிப்பவர்க்கு ஒரு குறையு மில்லையென்றும், ஜாதி குலம் ரூபம் அந்தஸ்து எதுவும் அவனுடைய கருணைக்கு இலக்கல்ல என்றும், நன்கு கனிந்த உள்ளத்தையே அவன் தேடி யலைகிறா னென்றும் துலங்கும் ஸ்ரீ வைஷ்ணவக் கொள்கைகள் என் மனத்திற் பதிந்தன. ஸர்வேச்வரனுக்குக் கட்டழகி- குரூபி என்றோ, தனிகன்- ஏழை யென்றோ, அநாதை- ஜனக்கட்டு உடையவ னென்றோ பாகுபாடு கிடையாதென்றும், அவன் தீனபந்து வென்றும், ஏகஸ்வாமி யென்

றும், அவன் திருவுள்ளப்படி நடந்து அவன் செயல் எதையும் முணுமுணுக்காது கொண்டாடுபனே மெய்யான அடியவ னென்றும், உயர்ந்த கொள்கை களைக் கேள்வியுற்றுப் பேரானந்தம் கொண்டேன். கண்ணன் தயாளு. யாவராலும் இகழப்பட்டுப் புழுவாய் ஒதுக்கப்பட்டுத் துடிக்கும் எனக்கு அவனே கதியன்றோ? இதை நினைக்க என் மனம் களித்தது.

நாட்கள் பல சென்றன. ஆழ்வார் பாசுரங்களைப் பாடம் செய்தேன். அவை சொல்லழகு பொருளழகில் என்னை ஈடுபடுத்தின. அம்மஹாநுபாவர் களுடைய திருமாலன்பு என் ஆவியை உருக்கியது. என்னுடைய உடல் பொருள் ஆவி எல்லாம் அவனுடையதென்று இருக்க வன்றோ ப்ராப்தம். என் யௌவநம் எனக்கு அன்பைத் தந்தது. மானிடரால் இகழப்பட்டு நம்பிக்கை யற்று ஏங்கிய என் உள்ளம், கண்ணன் என்ற கண்ணுக் கிலக் காகாத பொருளின்பால் காதலைச் சுடர்விடச் செய்தது. இருண்ட என் மனத்தில் பளீரென்று, 'கண்ணன் என்னைக் குரூபி யாக்கியதும் பெருங் கருணையே' என்று ஒரு யோசனை உண்டாயிற்று. எனக்கு நல்ல ரூப மிருந்துவிட்டால், என்னை ஒரு மனிதனுக்குத் தானே கொடுப்பார்கள். இப்பொழுதோ, என் களங்கமற்ற மனத்தையும் யௌவநத்தையும் என் கண்ணன்பால் நான் அர்ப்பணம் செய்யலா மல்லவா? கண்ணனது கருணை எவ்வளவு போற்றத்தக்கது?

பெரியாழ்வார் பெற்ற பெண்பிள்ளையான ஆண்டாள் தன்னைப் பீதக வாடைப் பிரானுக்கே அர்ப்பணம் செய்துகொண்டா ளல்லவா? மஹா லக்ஷ்மியாய்— ஸௌந்தர்ய தேவதையாய்— அன்பின் பெருங்கடலாய்— தூய்மைக்கோர் நிதியாய் விளங்கிய அப்பாவையர்க் கரசி தன்னைத் தாமோ தரனுக்கு ஒரு திவ்ய ஹவிஸ்ஸாகச் சொல்லிக்கொண்டாள். அப்பெரு மாட்டிக்கு நான் நேர் விருத்தமான தன்மைகளைப் பெற்றிருந்தாலும், அன்பில் அவ்வநிதா ரத்நத்தைப் பின்பற்றி அச்சுதனுக்கு என்னைத் திவ்ய ஹவிஸ்ஸாக அர்ப்பணம் செய்துகொண்டேன். கண்ணன் என்னைப் பெறுவானுகை. பாபியும் குரூபியுமான என்னை அவன் பெற்று மகிழ்வானுகை.

நாளாக நாளாக என் உள்ளத்தில் காதற்சுடர் ஒன்று கிளர்ந்தது. என்னைக் குறித்து அன்பான நோக்கையோ, அன்பான வார்த்தையையோ, அளிப்பவர் இல்லை. ஆயினும் என் கண்ணன் எனக்குச் சைதந்ய மளித்து 'என் ஆவி தனது' என்ற உண்மையை உணர்த்தினனே. என்ன கருணை! ரூப மில்லாவிட்டால் என்ன? பணம் இல்லாவிட்டால் என்ன? என்னதான் இல்லா விட்டால் என்ன? (ஸுயிவூஸஹெகிவிஹாஸ்யூஹ்யம் ஸுயிகவூஸஹெகிவிஹாஸ்தி

ஹூம்' என்று அப்பா சொல்லும் சுலோகம் ஞாபகம் வருகிறது. நீ இருந்து எது இல்லாவிடில் என்ன? நீ இல்லாது எது கிட்டித்தான் என்ன? உள்ளங் கூடக் குரூபிகளுக்கு வேருகவோ ஆகும்? உணர்ச்சியும் வேறே? அன்றே!

எங்கள் கிராமத்திற்கு நான்கு மைல் தூரத்தில் வாழ்கிருன் ராஜ மன்னர். குளக்கரையில் நின்று நோக்கினல் அவனது கம்பீரமான விமாந கோபுரங்கள் ஸேவையாகும். பிறந்தது முதல் பார்த்துக் களித்த அந்தக் கோபுரங்களின்பால் என் ஏழை உள்ளம் எவ்வளவு அன்பைச் சொரிந்தது! மனிதன் என்னை நேசிக்க மறுத்தான். மனிதன் என்னை மதிக்க மறுத்தான். மனிதன் என்னை உதைத்து மண்ணில் புரட்டினன். ஏங்கிய என் உள்ளத்திற்கு ஓர் அவலம்பம் வேண்டு மன்றே? தன்னடையாக, வேறு கதியற்று, சாஸ்த்ரங்களைக் கற்று உணராமலே என் உள்ளம் லோக நாதனை— கண்ணுக்குப் புலப்படாத ஒரு தத்வத்தை—நேசித்தது. என் அன்பெல்லாம் அவன் மீது வர்ஷித்தேன். அவன் மிகவும் க்ருபாளு. ஏன்? சாஸ்த்ரங்கள் அப்பச் சொல்வதனுல்ல; தர்சநம் அப்படி அறுதியிடுவதா லல்ல; என்னைக் கண்டவுடன் அவன் நடுங்கவில்லை. 'சீ இதென்ன ரூபம்!' என்று சொல்லவில்லை. என்னைக் கண்டு அப்பாற் செல்லவில்லை. தன் நிறைந்த மதி போன்ற முகத்தினல் தயை ததும்ப என்னை நோக்குகிருன். சிரிக்கிருன். நான் வராவிடில் வாடுவான் என்று கூட நினைக்கிறேன். ஏன் வாடமாட்டான்? அவனுக்கு என்ன பெயர் வைத்திருக்கிருர்கள்? பத்தர் ஆவி யல்லவா? உதாரனுய் ஸர்வஸ்வாமியாய் ஸர்வ குணேபேதனுய் இருக்கும் அவன் என்னை என் அழகற்ற உடலுக்காகப் புறக்கணிப்பானு? என்னை விட்டால் அவனுடைய ஸர்வஸ்வாமித்வம் நிலைக்குமா?

இப்படிப் பெற்ருேராலும் யாவராலும் இகழப்பட்டு, அது தான் எனக்குத் தக்க நிலை என்கிற ஸமாதானமும் கொண்டவளாக, என் வாழ் நாளை நடத்தினேன். தளிர் நிறைந்த கொடி கொள்கொம்பற்றுத் துவண்டது போல், என் கண்ணுக் கினியனுன கண்ணபிரானை மனத்தினல், என் ஆவி நிறைந்த அமலனை, என் கைகளாரக் குற்றவேல் செய்யப்பெருது வாடினேன். ஆயினும் அவனை நினைத்து நினைத்து மகிழுங்கால்— அவன் அடியவர்க்குச் செய்த மஹோபகாரங்களை நினைக்குங்கால்— என் நெஞ்சம் அன்பினல் பூரிக்கும். நான் எழும்போதும், எழுந்து பணி செய்யும் போதும், களைத் தயர்ந்து விழும் போதும், அவன் என்னுடன் தோன்ருத் துணைவனுய் நடமாடுவதாக நினைத்துக் கொண்டேன்.

[தொடரும்]

(4)

[ஸ்ரீ. உப. வித்வான் மதுராந்தகம் தி. ஈ. வீரராகவாசார்யர், திருவையாறு.]

அபுநராவ்ருத்தியைப் பற்றிய ஸந்தேஹங்களும் பரிஹாரங்களும் ஆறு வது ஏழாவது ஸஞ்சிகைகளில் ப்ரசுரமாகி, மேலும் தொடர்ந்து வருகின்றன. அது விஷயமாக அடியேனும் இந்த வ்யாஸத்தை விஜ்ஞாபநம் பண்ணுகிறேன்.

ஆழ்வார் ஆசார்யர்களைப்போலே அத்வாரகமாக அர்ச்சிராதி மார்க் கத்தாலே முக்தி பெற்றவர்க ளுண்டு. அன்றிக்கே பீஷ்மாதிகளைப்போல் வஸ்வாதி பத ப்ராப்தி பூர்வகமாக ஸத்வாரகமாக மார்க்காந்தரத்தால் முக்தியைப் பெற்றவர்களு முண்டு. இவ்விரண்டு அதிகாரிகளுக்கும் புநராவ்ருத்தி என்பது கிடையாது. யதாதிகாரம் மோக்ஷோபாயாநுஷ்டாநம் பண்ணினவர்கள் இவர்கள். ஆகவே வித்யாநுஷ்டாநம் செய்தவர்களே யதாதிகாரம் ஸத்வாரகமாகவோ அத்வாரகமாகவோ முக்தியைப் பெறுகிறார்கள் என்றும், அவர்களுக்குப் புநராவ்ருத்தி கிடையாது என்றும் தேறுகிறது.

ப்ரஹ்மவித்யை யன்றியிலும் முக்தியை அடையலாம் என்பதாக மதாந்தரஸ்தர் சிலர் இசைந்துள்ளார்கள். இப்பக்ஷத்தை அப்ரதீகாலம்பநாதிகரண சாங்கர பாஷ்யத்தில் காணலாம்.

‘ நச ப்ரஹ்மக்ரதுத்வம் ப்ரஹ்ம கச்சதீதி ஶ்ருத்யந்தரே யதாவஶாத் நிஶ்சயாபா‘ ஸந நாப்ரஹ்மக்ரதுர் கச்சதீதி, ஸர்வத்ராப்யவிஶேஷேணாஹது வாச உபஸம்ஹ்ருதே தத் ஸாவேத்ய ஏதத்கௌ தத்க்ரதுந்யாயேந ப்ரஹ்மக்ரதுஷ்ட்வநாமேவ தத்ப்ராப்திர் நேதரேஷாமிதி கம்யதே’ என்பதாக அங்குள்ள பாஷ்யம். ப்ரஹ்மோபாஸந மன்றியில் பஞ்சாக்கி வித்யாநிஷ்டன் ஒருவனே ப்ரஹ்மத்தை அடைவதாக விசேஷித்து வசநம் சொல்லுகிறது. மற்றவர் ப்ரஹ்மோபாஸநம் செய்தாலன்றி முக்தி பெற முடியாது என்பது ஸாமாந்ய ந்யாயத்தால் ஸித்தமாகிறது என்பதாக இதன் ஸாராம்சம்.

கார்யாதிகரண ச்ருதப்ரகாசிகையில் இப்பக்ஷத்தை ஆசங்கித்து நிரஸநம் செய்து ‘ப்ரஹ்மவித்யாவான்களுக்கே மோக்ஷம்; அல்லாதாருக்கு அது ஸம்பவியாது’ என்று ஸுஸ்பஷ்டமாக நிரூபித்திருக்கிறார்.

‘ நாந்ய: பந்தா அயநாய வித்யதே’ என்கிற ச்ருதியானது ப்ரஹ்மவித்யை இல்லாதார்க்கு ப்ரஹ்ம ப்ராப்தியை நிஷேதிக்கின்றது. அர்ச்சிராதி மார்க்கத்தினால் மோக்ஷம் பெறுதலையே அவர்களுக்கு இங்கு நிஷேதம் செய்வதாகக் கொள்ளில், அத்யாஹாரம் ஸங்கோசம் முதலிய தோஷங்கள் ஏற்படுகின்றன. ஆகவே ச்ருதிஸ்வாரஸ்யத்தை இசைந்து வசநாந்தரங்களை இதற்கு அநுகுண மாக்கிக்கொள்ளவேண்டும். ஆகவே ப்ரஹ்மவித்யை யன்றியில் முக்தி கிடையாது என்பது இங்கு திரண்ட பொருள். இதுதான் ஸித்தாந்தம். க்ரம முக்தி பெற்ற அயோத்யா வாஸி ப்ரப்ருதிகளும் ஸாந்தாநிகாதி லோகங்களை அடைந்து, பிறகு உபாஸந பலத்தினாலேயேமுக்தி பெற்றவர்கள். ‘கற்பா ரிராம பிரானை யல்லால்’ ‘ க்ஷாமாம நமஸி க்ஷயா:’ இத்யாதியான ஆழ்வார் ஆசார்ய

ஸ்ரீஸூக்திகளில் ஓர் உபாயமுமன்றிக்கே முக்தி பெற்றதாகக் காண்கிறது. ஸாந்தாநிக லோகம் எனும் கார்ய வைகுண்டம் பெற்றதாகவே இவர்கள் விஷயமான ப்ரமாணம் கூறுவதனால், அதைப் பெறுதற்கு இவர்கள் செய்த உபாயமொன்றுமில்லை என்று இவ்வளவிலேயே இந்த ஸ்ரீ ஸூக்திகளில் நோக்கு.

மோக்ஷமானது பரமபுருஷ வேதநம் ஒன்றையே உபாயமாகக் கொண்டது என்பதாக வாக்யாந்வயாதிகரண ஸ்ரீ பாஷ்யம். பஞ்சாக்நி வித்யாநிஷ்டனுக்கு ப்ரஹ்ம ப்ராப்தி உண்டாகையால், அதற்கு அநுகுணமாக ப்ரஹ்மோபாஸநமும் தத்க்ரது ந்யாயத்தாலே கல்பிக்கவேண்டும் என்பதாகக் கார்யாதிகரணத்தில் அப்ரதீகாலம்பந ஸூத்ர ஸ்ரீபாஷ்யம். ப்ரஹ்ம வித்யை யன்றியில் மோக்ஷம் உண்டு என்னில், பஞ்சாக்நி வித்யாநிஷ்டனுக்கு ப்ரஹ்மோபாஸநத்தைத் தத்க்ரது ந்யாயத்தாலே ஸ்தாபித்தல் கூடாதே. பரமாத்மோபாஸந ப்ரகரணத்திலேயே ப்ரக்ருதி மண்டலாதிக்ராந்த தேசவாஸம் சொல்லியிருப்பதால், கைவல்ய நிஷ்டனுக்கு அவ்வுபாஸந மில்லாமையால், ப்ரக்ருத்யதிக்ராந்த தேசவாஸம் சேராது என்பதாக ந்யாயஸித்தாஞ்ஜந தாத்பர்ய சந்த்ரிகாதிகளில் ஆசார்யன் நிஷ்கர்ஷம். ஆகவே, இவை எல்லாவற்றையும் உற்று நோக்குமிடத்தில் ப்ரஹ்ம வித்யை யன்றியில் மோக்ஷம் அடைவது என்பது ஸாத்யமன்று என்று சாஸ்த்ர ஸரணியும் ஆசார்யர்கள் திருவுள்ளமும் என்பது தேறுகிறது.

வைதிக புத்ர வ்ருத்தாந்தத்தையும் இதிஹாஸ புராணங்களில் நிரூபிக்குமிடத்தில், அவர்கள் ப்ரக்ருதிமண்டலத்தைச் சேர்ந்த விஷ்ணு லோகத்தையே அடைந்ததாகவும், ஆகவே அவர்களை கண்ணன் மீட்டதாகவும் ஏற்படுகிறது.

[தொடரும்.]

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா '46 ஸெப்டெம்பர்மீ-த்துச் சந்தா வரவு

			ரூ.	அ.
94	ஸ்ரீ. G. R. தோதாத்ரி ஐயங்கார், தி. நகர்.	....	3	0
114	,, S. ரங்கநாத ஐயங்கார், பம்பாய்.	....	6	0
182	,, V. S. ராகவாசார்யர், தி. நகர்.	....	3	0
185	,, S. ஸ்ரீநிவாஸஸுந்தர ஐயங்கார், வீரராகவபுரம்.	....	3	0
235	,, V. S. நரஸிம்ஹையங்கார், உமையாள்புரம்.	....	5	0
278	,, V. K. சேஷாத்ரி ஐயங்கார், திருக்கண்ணமங்கை.	....	3	0
405	,, K. S. மாதவாசார்யர், கும்பகோணம்.	....	5	0
431	,, A. நாராயணையங்கார், மயிலாப்பூர்.	....	3	0
470	,, சின்னமு பாட்டராசார்யர், கும்பகோணம்.	....	5	0
626	,, V. க்ருஷ்ணமூர்த்தி, கல்யாணமஹாதேவி.	....	2	0
726	,, K. க்ருஷ்ணமாசார்யர். தி. நகர்	...	3	0
737	,, N. S. B. ஆசார்யர், சென்னை.	....	3	0
	,, வித்வான். R. கோஸகாசார்யர், திருப்புல்லாணி.	...	3	0
	ஸ்ரீ. ரங்கநாயகி அம்மாள்	....	3	0

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंह परब्रह्मणे नमः

योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तुभ्यम् ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

திருப்பதி ஸர்வ கலாசாலை

திருப்பதி தேவஸ்தான அதிகாரிகள் வித்யாபிவ்ருத்தியை உத்தேசித்துத் திருப்பதியில் பெரியதொரு ஸர்வ கலாசாலையை ஏற்படுத்தப் போகிருர்களென்றும், அதற்காக அவர்கள் மஹத்தான ப்ரயத்நங்களைச் செய்து வருகிருர்களென்றும் மஹாஜநங்கள் எல்லோரும் அறிந்திருக்கலாம். அந்தக் கலாசாலை அடுத்த 1947-ம் வருஷம் ஜுலை மாஸத்தில் ஆரம்பிக்கப்படுமாம். அதன் நிர்வாஹத்துக்குத் தேவையான தநம் முழுவதும் தேவஸ்தான ஸொத்திலிருந்தே எடுத்துக்கொள்ளப்படுமென்றே சொல்லுகிருர்கள். கலாசாலை நடத்தப்படும் ப்ரகாரம், உத்தர தேஶத்தில் காசி ஸர்வ கலாசாலையின் ரீதியை அநுஸரித்திருக்குமென்றும், வித்யாப்ரசார விஷயங்கள் ஸம்பந்தப்பட்ட பர்யந்தம் ஒருவித குறைவும் இருக்கமாட்டாதென்றும் அந்த அதிகாரிகள் சொல்வதிலிருந்து தெரியவருகிறது. இந்த ஆலோசனையைப் பற்றித் தடஸ்தர்களான அநேக பெரியோர்கள், தமது அபிப்ராயத்தைப் பத்ரிகைகள் வாயிலாக வெளியிட்டிருப்பதை நாம் பார்த்திருக்கிருேம். வித்யாபிவ்ருத்தி செய்ய யத்நிப்பது ச்லாக்யமான கார்யமாக இருந்தாலும், அதை ஸாதித்துக் கொள்வதற்காக இவர்கள் உத்தேஶித்திருக்கும் மார்க்கம் தர்மத்துக்கு ஒத்த தன்று என்பது அவர்களுடைய அபிப்ராயம். குறிப்பிட்ட ஒரு தர்மத்தை உத்தேஶித்து மஹாஜநங்களால் கொடுக்கப்பட்டுள்ள த்ரவ்யத்தை அந்தத் தர்மத்தின் ஸம்ஸ்தாபநத்துக்காக உபயோகப்படுத்தாமல் அதை அநாதரித்து விட்டு, வேருெரு தர்மத்துக்காக அதை உபயோகிப்பது துர்விநியோகமாகுமென்பதே அவர்களுடைய ஆக்ஷேபம். அந்த ஆக்ஷேபத்தை நாம் ஆமோதிக்கிருேம்.

‘தேவஸ்தாநத்தின் அபிவ்ருத்திக்கு யாவதபேக்ஷிதம் அதன் ஸொத்து செலவு செய்யப்பட்டு வருகிறதா? அப்படி அந்த அபிவ்ருத்தியைப் பூர்ணமாகச் செய்த பிறகும், அந்த ஸொத்திலிருந்து கிடைக்கும் வருமானம் அவஶிஷ்டமாக இருக்கிறதா?’ என்பதை நாம் அவதாநத்துடன் பார்க்கும்போது, தேவஸ்தாநத்தில் நடத்தப்பட வேண்டிய நித்யோத்ஸவம் முதலியவைகள் ஒருவாறு நடத்தப்பட்டு வந்தாலும், அந்தத் தேவஸ்தான பரிபாலந விஷயத்தில் இன்னும் ஏராளமான குறைவுகள் இருக்கின்றனவென்றே தெரிகின்றது. அவைகளை த்ருப்திகரமாகச் சீர்திருத்தம் செய்வதற்கு இப்பொழுது தேவஸ்தா

நத்துக்குக் கிடைக்கும் வருமானம் அபர்யாப்த மென்றே சொல்லவேண்டும். முதலில், திருப்பதி மலை நிரந்தரவாஸத்துக்கு அநர்ஹ மென்பதும், அப்படி வஸித்தால் ஜ்வரம் வந்து ஜநங்கள் ச்ரமப் படுகிறுர்க ளென்பதும் ஸுப்ரஸித்தம். அப்படி ஜ்வரம் முதலிய நோய்கள் வாராமல் தடுப்பதற்கு, இக்காலத்து வைத்ய ஶாஸ்த்ரங்களில் எவ்வளவோ பரிஹாரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளைச் சரிவரச் செய்து, அவ்விடத்தில் தேவதாராதநாதிகளை உத்தேஶித்து வஸிப்பவர்களுக்கும் ஸேவார்த்திகளாக அப்பொழுதைக்கப்பொழுது வந்து போய்க்கொண்டிருக்கும் ப்ரயாணிகளுக்கும் ஸௌகர்யமாக அந்த ஸ்தலத்தைச் சீர்திருத்துவது முக்யமான கார்யங்களுள் ஒன்று. மஹாஜந ஸௌகர்யத்தை உத்தேசித்துப் பெரிய நகரங்களில் என்னென்ன சீர்திருத்தம் செய்யப்பட்டு வருகின்றது என்பதைப் பார்த்தால், இந்த ஸ்தலம் மிகவும் அநாதரிக்கப்பட்டு வருகிறதென்பது நன்கு விளங்கும். இங்குமங்கும் ஸேவார்த்திகள் தங்குவதற்கு விடுதிகள் கட்டிக் கொடுப்பதும், உத்ஸவ காலங்களில் சிற்சில சிப்பந்திகளை நியமிப்பதும் போதுமான ஸௌகர்ய மாகுமோ? தேவதை எழுந்தருளியிருக்கும் ஸந்நிவேஶத்தைச் சுத்தமாகவும் ரமணீயமாகவும் வைத்துக்கொள்வது அவசியமன்றோ? இதர நகரங்களில் செய்யப்படும் சீர்திருத்தங்களில், ஆயிரத்தில் ஒருபாகம் கூடத் தேவதா ஸந்நிதியில் செய்யப்படவில்லை யென்றால் இது பெரியதொரு தோஷமாக மாட்டாதோ? அபரிமிதமான பணம் இருந்தாலும், இந்தச் சீர்திருத்தத்தை த்ருப்திகரமாகச் செய்வதற்கு அது போதாதே. இப்படியிருக்கையில், தேவஸ்தாநம் செலவு போக அதிக த்ரவ்யம் பாக்கி இருக்கிற தென்றும், அதை வேறொரு தர்மத்துக்கு உபயோகப்படுத்திக் கொள்ளலா மென்றும் அதிகாரிகள் சொன்னால் அது அங்கீகாரத்துக்கு அர்ஹமாகுமா?

நிற்க: தேவாலயங்களில் மந்த்ரலோபம் க்ரியாலோபம் முதலியன நேராமல் ஶாஸ்த்ரங்களில் விதித்திருக்கும் ப்ரகாரம் ஆராதநாதிகளையும் உத்ஸவாதிகளையும் செய்து வருவதற்குத் தேவையான ஜ்ஞாநத்தையும் ஶக்தியையுமுடைய அதிகாரிகள் இக்காலத்தில் மிகவும் ம்ருக்யர்களாக இருக்கிறுர்க ளென்பது யாவரும் அறியக்கிடக்கின்றது. சிற்சில தேவாலயங்களில் சரியான திறமையும் ஶக்தியும் வாய்ந்த அர்ச்சகர்கள் அகப்படாமல் அல்பஜ்ஞர்களைக் கொண்டு அர்ச்சக கார்யங்கள் நிர்வஹிக்கப்பட்டு வருவது எவருக்குத் தெரியாது? பாஞ்சராத்ர வைகாநஸாதி ஶாஸ்த்ரங்கள் பெரியதொரு ஸமுத்ரம். அவைகளை நன்கு அப்யஸித்து அவைகளில் தேர்ச்சி பெறுவதற்கு, அதம பக்ஷம் பத்து வர்ஷங்களாவது வேண்டும். அந்த வித்யையை அபிவ்ருத்தி செய்து தேர்ந்த அர்ச்சகர்களைத் தயாரித்துக் கொடுப்பது தேவாலயத்தைச் சார்ந்த தர்மமன்றோ? அதில் கொஞ்சமேனும் மநஸ்ஸைச் செலுத்தாமல், த்ரவ்யம் மிகுதியாய் இருக்கிறதென்றும், அதை வேறு தர்மங்களில் செலவிட்டுக் கொள்ளலா மென்றும் சொல்வது ந்யாய்யமாகுமா?

இன்னும் இம்மாதிரியான பல விஷயங்கள் ஆத்யந்திக லோபத்தை அடைந்து வருகின்றன. அவைகளை அநாதரிப்பது உசிதமாக மாட்டாதென்பதை ப்ரஸ்துத தேவஸ்தாந அதிகாரிகளுக்கு நாம் தெரிவிக்கத் துணிகின்றோம்.

* * *

முக்தியின் உபாயம் பக்தியா? கேவல த்யாநமா?

ஸ்ரீமத் பாகவதம் ஏழாவது ஸ்கந்தம் வேநனுடைய உபாக்யாநத்தைச் சொல்லிவரு மிடத்தில் பின்வருமாறு ஒரு விஷயத்தைப் பற்றி ஆக்ஷேப ஸமாதாநம் ஒன்று தென்படுகின்றது. ராஜஸூய யாகத்தில், பால்யம் முதல் க்ருஷ்ணனை நிந்தித்த ஶிசுபாலன் பகவத் ஸாயுஜ்யத்தை அடைந்தானென்று நாரத மஹர்ஷி சொல்ல, அப்போது யுதிஷ்டிரர் நாரத மஹர்ஷியைப் பார்த்து, “ஹே மஹர்ஷியே! பால்யம் முதல் ஸ்ரீக்ருஷ்ணனிடத்தில் மஹத்தான த்வேஷத்தைப் பாராட்டி வந்த ஶிசுபாலனுக்குப் பரதத்வ ப்ராப்தி எப்படிக் கிடைத்தது? பகவந் நிந்தையால் வேநன் என்னும் அரசன் தமஸ்ஸில் தள்ளப் பட்டானே. அப்படியிருக்க, எப்பொழுதும் ஶபித்துக் கொண்டிருந்த ஶிசுபாலன் ப்ரஹ்ம பதத்தை எப்படி அடைந்தான்? இந்த அத்புதத்தை எனக்கு விளக்க வேண்டும்” என்று ஒரு ப்ரச்நம் செய்கிறார். இதற்கு நாரத மஹர்ஷி, “ப்ரஹ்ம ப்ராப்திக்கு இடைவிடாமல் பகவானை ஸ்மரிப்பதே காரணம். வைரத்தை முன்னிட்டோ, ஸ்நேஹ புத்தியாலோ, அல்லது காமத்தாலோ பகவதநுஸ்மரணத்தை ஒருவன் செய்தால் அவன் பகவானுடைய ஸாயுஜ்யத்தை அடைவானென்பதில் ஸந்தேஹமில்லை. லோகத்தில் புழுக்கள் குளவியால் எப்பொழுதும் கொட்டப்பட்டு அதனால் ஏற்படும் இடைவிடாத ஸ்மரணத்தால் அந்தக் குளவியின் தன்மையை அவை அடைகின்றன என்பதைக் கேட்டதில்லையோ? காமத்தால் கோபிகளும், பயத்தால் கம்ஸனும், கேவலம் ஸம்பந்தத்தால் வ்ருஷ்ணிகளும், ஸ்நேஹத்தால் நீங்களும், பக்தியால் நாங்களும் பகவத் ஸாயுஜ்யத்தை அடைகிறோமல்லவா? ஆகையால் ஏதாவது ஓர் உபாயத்தால் மநஸ்ஸை க்ருஷ்ணனிடத்தில் அநவரதம் செலுத்துவதே முக்திக்குக் காரணம்” என்று அந்த ப்ரச்நத்துக்கு ஸமாதாநம் சொன்னார். இதோடு நிற்காமல் இதற்கு மேலும் ஒரு வார்த்தை சொல்லுகிறார். “𑌯𑌥𑌾 𑌵𑍈𑌰𑌾𑌨𑍁𑌬𑌨𑍍𑌧𑌨 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌸𑍍𑌤𑌨𑍍𑌮𑌯𑌤𑌾𑌮𑌿𑌯𑌾𑌤𑍍। 𑌨 𑌤𑌥𑌾 𑌭𑌕𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑍇𑌨 𑌇𑌤𑌿 𑌮𑍇 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌾 𑌮𑌤𑌿𑌃” [ஒரு ஜீவன் வைரத்தை முன்னிட்டுப் பகவானிடம் மநஸ்ஸைச் செலுத்தி, அதனால் அவன் எவ்வித விளம்பமுமின்றிக்கே எப்படி முக்தியை அடைவானோ, அம்மாதிரி விளம்ப மின்றிக்கே பக்தியை முன்னிட்டு மனத்தைச் செலுத்துகிறவன் முக்தியை அடையமாட்டான் என்பதே என்னுடைய உறுதியான நிர்ணயம்] என்பது தான் அந்த வார்த்தை. இந்த ஸமாதாநங்கள் உபபந்நங்களாகுமா வென்பதை நாம் விசாரிக்க வேண்டும்.

இவை உபபந்நங்களானால், பகவானை நிந்திப்பதால் ஒருவனுக்குப் பாபமுண்டாகாம் விருக்க ப்ரஸங்கிக்கு மன்றோ? பகவானை ஸ்தோத்ரம் செய்வதால் புண்யமும் உண்டாகா தென்றே சொல்லவேண்டு மன்றோ? இப்படிச் சொல்வது ஸர்வ ஶாஸ்த்ரங்களுக்கும் விருத்தமாகுமே. பகவத் கீதையில், “என்னை த்வேஷிப்பவர்களையும் என்னிடம் அஸூயையைச் செய்பவர்களையும் நான் அசுபமான ஆஸுரயோநிகளில் தள்ளுகிறேன்” என்று கீதாசார்யனே அநுக்ரஹித்திருக்கிறான். நிற்க: உபநிஷத்தில் நிரதிஶய ப்ரீதி ரூபமான அவிச்சிந்ந ஸ்ம்ருதி ஸந்ததியாகிற பக்தி ஒன்றே பகவத் ப்ராப்திக்குக் காரண

மென்று "𑌯𑌮𑍇𑌵𑍈𑌷 𑌵𑍃𑌣𑍁𑌤𑍇 𑌤𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯𑌃" இத்யாதியான வாக்யத்தால் சொல்லப்பட்டிருக்கிறது. கீதையில் மற்ருேரிடத்தில் "பரமபுருஷன் அநந்யையான பக்தி ஒன்ருலேயே அடையப்படக் கூடியவன்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. "𑌤𑌮𑍇𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑌮𑍃𑌤 𑌇𑌹 𑌭𑌵𑌤𑌿" [பகவானிடத்தில் பக்தி செய்கிறவனே அம்ருததத்வத்தை அடைகிருன்] என்று ச்ருதியும் சொல்லுகின்றது. இவ்வளவு பாதக ப்ரமாணங்கள் விழித்துக்கொண்டிருக்கையில், ஸ்ரீ நாரத மஹர்ஷி இம்மாதிரி நிர்ணயத்தை எப்படிச் செய்தார்? ஸ்ரீ நாரதரே இதற்கு ஒரு ஸமாதாநத்தையும் அநுக்ரஹித்திருக்கிருர்:—

"𑌨𑌿𑌨𑍍𑌦𑌨𑌸𑍍𑌤𑌵𑌸𑌤𑍍𑌕𑌾𑌰𑌨𑍍𑌯𑌕𑍍𑌕𑌾𑌰𑌾𑌰𑍍𑌥𑌂 𑌕𑌲𑍇𑌵𑌰𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌪𑌰𑌯𑍋 𑌰𑌾𑌜𑌨𑍍𑌨𑌵𑌿𑌵𑍇𑌕𑍇𑌨 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌮𑍍 ॥
𑌹𑌿𑌂𑌸𑌾 𑌤𑌦𑌭𑌿𑌮𑌾𑌨𑍇𑌨 𑌦𑌣𑍍𑌡𑌪𑌾𑌰𑍁𑌷𑍍𑌯𑌯𑍋𑌰𑍍𑌯𑌥𑌾 ।
𑌵𑍈𑌷𑌮𑍍𑌯𑌮𑌿𑌹 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌮𑌮𑌾𑌹𑌮𑌿𑌤𑌿 𑌪𑌾𑌰𑍍𑌥𑌿𑌵 ॥
𑌯𑌨𑍍𑌨𑌿𑌬𑌦𑍍𑌧𑍋𑌽𑌭𑌿𑌮𑌾𑌨𑍋𑌽𑌯𑌂 𑌤𑌦𑍍𑌵𑌧𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌨𑌾𑌂 𑌵𑌧𑌃 ।
𑌤𑌥𑌾 𑌨 𑌯𑌸𑍍𑌯 𑌕𑍈𑌵𑌲𑍍𑌯𑌾𑌦𑌭𑌿𑌮𑌾𑌨𑍋𑌽𑌖𑌿𑌲𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥
𑌪𑌰𑌸𑍍𑌯 𑌦𑌮𑌕𑌰𑍍𑌤𑍁𑌰𑍍𑌹𑌿 𑌹𑌿𑌂𑌸𑌾 𑌕𑍇𑌨𑌾𑌸𑍍𑌯 𑌕𑌲𑍍𑌪𑍍𑌯𑌤𑍇 ।"

[இதன் கருத்து என்னவென்ருல்:— "ஸம்ஸாரி சேதநர்களுக்குப்போல் ஈச்வரனுக்குப் பிறரால் செய்யப்படும் ஸ்துதி நிந்தைகள் எவ்வித துரபிமாநத்தையும் உண்டுபண்ணமாட்டா. தேஹமே ஆத்மா வென்னும் ப்ரமம் எவனுக்கு இருக்கிறதோ, அவனையே நிந்தை வருத்தும்; ஸ்தோத்ரம் ஸந்தோஷிப்பிக்கும். அந்த வருத்தத்தினுலோ ஸந்தோஷத்தினுலோ, அவனுடைய மநஸ் ஒருவித விகாரத்தை அடைகின்றது. அந்த விகாரம் ஒருவித ப்ரதீகாரத்தைச் செய்யும்படி அவனைத் தூண்டுகின்றது. ஈச்வரனுக்கோ வென்ருல், தேஹாத்ம ப்ரமம் இல்லை. ஆகையால் நிந்தாஸ்துதிகளால் அவனுக்கு ஒருவித மநோவிகாரமும் உண்டாக இடமில்லை; ஆகையால் ப்ரதீகாரம் செய்யவேண்டு மென்னும் எண்ணம் அவனுக்கு ஜநிக்கமாட்டாது. ஆகையால் தன்னைச் சபிக்குமவனையும் ஶிக்ஷியாமலே அவன் அநுக்ரஹிப்பன்"] என்பதுதான் இவ்விடத்தில் நாரதர் சொல்லும் பரிஹாரம்.

இந்தப் பரிஹாரத்தால் கீழ்ச்சொல்லப்பட்ட அநுபபத்தி பரிஹ்ருதமானதாகத் தெரியவில்லை. வேநனும் பகவானை நிந்தித்தான்; ஶிசுபாலனும் நிந்தித்தான். ஸ்துதி நிந்தைகளால் விகாரமடையாத மநஸ்ஸையுடைய பகவான், இருவருக்கு மன்ருே முக்தியை அளித்திருக்கவேண்டும்? ஒருவனுக்குக் கொடுத்து, மற்ெருருவனுக்குக் கொடாமலிருப்பது எப்படி ஸங்கதமாகும்? நிற்க, "முக்தி பெறுவதற்கு மநஸ் ப்ரீதி பூர்வகமாகவே பகவானை த்யாநிக்க வேண்டுமென்னும் நியம மொன்றுமில்லை. எப்படியாவது மநஸ் அவனிடத்தில் வைக்கப் பட்டால் அதுவே போதும் அதிலும் த்வேஷத்துடன் வைக்கப்பட்டால் அதிஶீக்ரத்திலேயே முக்தி கிடைக்கும்" என்பதும் உபபந்நமாகத் தெரியவில்லை. நாரதரின் உட்கருத்து என்னவென்ருல்: 'த்வேஷத்தால் ஏற்படும்

நினைவு ப்ரீதியால் ஏற்படும் நினைவைக் காட்டிலும் பல மடங்கு தீவ்ரமானது. பாவநா ப்ரகர்ஷம் கோபத்தில்தான் அதிகம். அதனுலேயே அதில் முக்தி தாமத மிராமல் கிடைக்கின்றது' என்பதுதான். இதன் தத்வம் இதை உணர்ந்தவர்க ளுக்கு மாத்ரம் விளங்கும். வஸ்துஸ்திதி அப்படிப்பட்ட தென்றே என்று நாம் ஒத்துக் கொண்டாலும், நம்முடைய மற்றொரு ஆக்ஷேபம் பரிஹ்ருதமாகாமலே நிற்கின்றதன்றோ? அதாவது: இரண்டு பெயர்கள் த்வேஷிக்கையில் ஒருவருக்கு முக்தியைக் கொடுத்து, மற்றொருவனைத் தமஸ்ஸில் தள்ளுவது எப்படி ஸங்கத மாகும்? 'க்ஷிபாமி' என்னும் நிக்ரஹ ஸங்கல்பத்தின் கதிதான் என்ன?

இவை யெல்லாவற்றையும் ஊன்றிப் பார்த்தால் ஸ்ரீ நாரதருடைய ஸமா தாநத்துக்கு ஔபசாரிகமாக ஒரு தாத்பர்யம் கல்பிக்கலாமோ வென்று தோன்றுகிறது. 'நாரதரின் கருத்து அநவரத த்யாநத்தின் ஆவச்யகதையை வற்புறுத்த வேண்டு மென்பதே. ப்ரீதி பூர்வகமாகப் பக்தி செய்வதுதான் ஶாஸ்த்ரீயமான உபாயம். ஆனல் கேவல த்யாநம் வஸ்து ஸ்வ பாவ மடியாக பாப நிவ்ருத்தியைச் செய்து பரம்பரையாக அவனுக்கு முக்தியைப் பெறுவிக்கின்றது' என்பதுதான் அந்தச் சொல்லுக்குத் தாத்பர்ய மென்று அதை விளக்கக் கூடாதா? உத்ஸாஹம் உந்மஸ்தகமாக வளர்ந்தால் இம்மாதிரி ஒரு அத்யுக்தி ஸம்பவிப்பது உண்டாகுமன்றோ? ஜ்ஞாநியின் மஹிமையைப் பற்றிப் புகழ்ந்து வந்த ஸ்ரீ கீதாசார்யன், அந்த ஜ்ஞாநியைத் தனது ஆத்மாவாகச் சொல்லவில்லையா? அது ஶாஸ்த்ர விருத்த மென்பதை அறிந்திருந்தும், அவ்விதம் ஸ்ரீ பகவான் அநுக்ரஹித்திருப்பது அத்யுக்தியன்றோ? 'மே மதம்' [என்னுடைய அபிப்ராயம்] என்னும் உக்தி, 'இது ஶாஸ்த்ரங்களின் மத மன்று தான்; அப்படி யிருந்த போதிலும், இது என்னுடைய புதிய மதமாக க்ரஹிக்கப்படட்டும்' என் பதை ஸூசிப்பிக்கிறதன்றோ? இது ஒரு ரஸவத்தான உக்திபங்கி. இதை உணர்ந்த ஸ்ரீ தேஶிகனும் சந்த்ரிகையில் இதை விவரிக்குமிடத்தில், 'ஜ்ஞாநீ த்வாத்மைவ ஸ்வஸ்வரூபஸத்தாஹேதுத்வாதிதி ஸ்வஹ்ருதஸ்துதிவாத: ஶ்லோக:' [என்னுடைய ஸ்வரூபத்தின் ஸத்தை ஜ்ஞாநிக்கு அதீநமென்னும் இந்த உக்தி, தனது பக்தனை ஸ்தோத்ரம் செய்வதற்காகவே] என்று இதை விளக்கியிருக்கிறார். அவ்விடத் திற் போல இவ்விடத்திலும், 'இதி மே மதி:' என்னும் வார்த்தை காணப்படு கின்றதென்பது கவனிக்கத் தக்கது. இப்படித் தாத்பர்யம் கொள்ளாவிடின் பலவத்தான ஶாஸ்த்ர விரோதம் ஸம்பவிக்கு மென்பதே நமது பயம்.

* * * *

செய்திகள்

(1)

ஸ்ரீ கல்யாணபிவர்த்தநி ஸபா, மதுராந்தகம்

ஷை ஸபை ’46, ஜூலை 28, ஆகஸ்ட் 20, ஸெப்டம்பர் 18, ஆக மூன்று நாட்கள் ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத கலாசாலையில் கூடிற்று. முதற் கூட்டத்தில் ஸ்ரீ. உப, ப்ரின்ஸ்பல் ஸ்வாமி தலைமையில், ந்யாயஸிரோமணி நான்காம் வகுப்பு மாணவன் S. வரதன், “ஸுநாமிராவாத மிராவஜஸி” என்னும் விஷயத்தையும், இரண்டாவது கூட்டில் ஸ்ரீ. உப. வைஸ் ப்ரின்ஸ்பல் ஸ்வாமி தலைமையில், ந்யாயஸிரோமணி முதல் வகுப்பு மாணவன் P. S. ராஜகோபாலன், “ஸம்ஹதி:காயஸாயிகா” என்னும் விஷயத்தையும், மூன்றும் கூட்டத்தில் ந்யாயாத்யாபக வேதாந்த வாவதூக ஸ்ரீ. உப. நாராயணாசார்ய ஸ்வாமி தலைமையில் வ்யாகரணஸிரோமணி மூன்றும் வகுப்பு மாணவன் A. V. நரஸிம்ஹன் “ஸூத்ராணி: ஸ்வாயாநி:” என்னும் விஷயத்தையும் எழுதிப் படித்தனர். அந்தந்தக் கூட்டத்தில் சொற்பொழிவு முடிந்ததும், மாணவர் பலர் அவ்வவ் விஷயங்களைப் பற்றிப் பேசினர். இம்மூன்று கூட்டங்களிலும் அத்யாபகர்கள் ப்ரஸங்கர்களாக இருந்தனர்.

T. ஸ்ரீநிவாஸன்
T. C. க்ருஷ்ணமாசாரி
[கார்யதர்ஸிகள்.]

(2)

ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ரமஹா தேசிகன் திருநக்ஷத்ர வைபவம், தெய்யார்.

தெய்யார் ஸ்ரீ அஹோபில மடத்தில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய வார்ஷிக மஹோத்ஸவம், புரட்டாசிமீ 6வ உபக்ரமிக்கப் பட்டு வெகு ஸம்ப்ரமமாக நடைபெற்றது. சாத்துமறை யன்று காலையில், ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஸந்நிதியில் ஸ்ரீ தேசிகன் பர்யந்தம், மஹா தேசிகன் மங்களாசாஸநம் செய்தருளினர். அநந்த கொத்து பரிஜநங்களுடன் ஸ்ரீ ஸ்வாமி வீதி உத்ஸவம் கண்டருளி, ஸ்ரீ மடத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை மங்களா சாஸனம் செய்யும்படி யிருந்தது. அநந்தரம் உபய வேத வேதாந்தங்களுடன் சாத்துமறை விசேஷமாய் நடைபெற்றது. சோகத்தூர் சக்ரவர்த்தி ஸ்ரீ. உப. நாராயணாசார்யரால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஸ்ரீ ந்ருஸிம்ஹன் உண்டியின் செலவில் தளிகைகள் விநியோகிக்கப்பட்டன. அன்றிரவு ஸ்ரீநிவாஸப் பெருமாளுக்கும் ஸ்ரீ ஆதிவண் சடகோப ஸ்வாமிக்கும் வீதி உத்ஸவம் நடந்து ஆஸ்தாநத்துக்கு எழுந்தருளி, சாத்துமறை விமர்சையாக நடைப்பெற்றது. இம்மஹோத்ஸவத்தை வெளியூர் ஸ்வாமிகளும் உள்ளூர் ஸ்வாமிகளும் ஸேவித்து ஆநந்த மடைந்தார்கள்.

சோகத்தூர். லக்ஷ்மிநாராயண தாஸன்.

(3)

திருக்குடந்தையை அடுத்த ஒப்பிலியப்பன் ஸந்நிதி என்று வழங்கப்படும் ஸ்ரீ திருவிண்ணகரப்பன் ஸந்நிதியில், ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் உத்ஸவம் வெகு ஸம்ப்ரமமாக நடைப்பெற்றது. அம்மஹோத்ஸவத்தில் வேதபாராயணத்துக்கும் அத்யாபகத்துக்குமாக அநேக ஸ்வாமிகள் ஸேவை ஸாதித்தனர். அவ்வளவு திருநாமங்களுக்கும் ஸ்ரீ. உப. நவநீதம் ஸ்வாமி, தம் திருமாளிகையில் ஆதித்யம் செய்தருளினது போற்றத் தக்கது.

... ...

தஞ்சாவூரை யடுத்த வெண்ணாற்றங் கரையில் வழக்கம் போல் ஸ்ரீ தேசிகன் உத்ஸவம் அத்யாபக வேதபாராயணங்களுடன் அதிவிமர்சையாய் நடந்து வருகிறது.

ஏமப்பூர். ராமஸ்வாமி ஐயங்கார்.

Regd. No. M. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற
கீழ்க் கண்ட புஸ்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

	சந்தாதாரர்களுக்கு ரூ. அ. பை.	மற்றவர்கட்கு ரூ. அ. பை.
1. ஸ்ரீ அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	6—8—0	7—8—0
2. உக்தி நிஷ்டபரணம் ந்யாஸ நிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0–12—0	1—0—0
3. உக்தி நிஷ்டாபரணோத்யோதம் („)	0—8—0	0–12—0
4. வீக்ஷாரண்ய க்ஷேத்ர மஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் ... (க்ரந்த லிபி)	1—0—0	1—8—0
5 .ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி) ...	0—8—0	0–12—0
6. ஸ்ரீ வீரராகவஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—3—0	0—4—0
7. ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹம் (க்ரந்த லிபி)	2—0—0	3—0—0
8. ஈசாவாஸ்ய, கேந, கடோபநிஷத் (நாகர லிபி, தமிழ் மொழி பெயர்ப்புடன், 160 பக்கம்)	1—0—0	1—8—0

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள்:—

"மானேஜர், **ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,**

5- நெ. ராமஸ்வாமி தெரு, தியாகராய நகர், சென்னை,"

என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

Printed by T. A. P. Srinivasavaradachariar,
at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, Little Conjeeveram.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramaswami St., Tyagarayanagar, Madras.